

முச்சந்தி முரளி

" திலீபனை நினைவேந்த
தடை போட்டவைக்கு
உந்த கோதாரியில
போறவையின்ர
ஆர்ப்பாட்டம் கன்னுக்கு
தெரியேல போல "

# உதயன்

பக்கங்கள் - 20 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :303 புரட்டாதி 12 ஆம் நாள் திங்கட்கிழமை 28 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


# ராஜபக்ச அரசின் அடக்குமுறைக்கு எதிராக தமிழர் தாயகத்தில் இன்று ஹர்த்தால்

## அரசின் எதேச்சதிகாரத்துக்கு எதிராக தமிழர் தாயகம் இன்று முடங்கும்!

மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்கிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், செப். 28
தமிழர்கள் மீதான ராஜபக்ச அரசின் திட்டமிட்ட அடக்குமுறைகளுக்கு எதிராகவே தமிழர் தாயகத்தில் இன்று பூரண ஹர்த் 18

## ராஜபக்சக்களின் குழப்பங்களுக்கு இடமளியாது ஓரணியாகத் திரள்வோம்

மாவை. அறைகூவல்



யாழ்ப்பாணம், செப். 28
ஒன்றிணைந்த தமிழ் கட்சிகளின் ஒற்றுமையை குழப்ப நினைக்கும் அரசின் 18

## முழு அடைப்புக்கு ஆதரவு வழங்குங்கள்

விக்னேஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், செப். 28
வடக்கு - கிழக்கில் இன்று நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குங்கள். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவ 04

## இன்றைய முழு அடைப்புக்கு சகலருமே ஒத்துழையுங்கள்!

சுரேஸ் அழைப்பு



தமிழ் மக்களின் விடுதலைக்காக மரணித்துப் போனவர்களை அஞ்சலிக்கும் நிகழ்வுகளை அரசு தடை செய் 18

## முஸ்லிம்களும் போராட்டத்துக்கு பெரும் ஆதரவைத் தாருங்கள்

கோருகிறார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், செப். 28
தமிழர் தாயகத்தில் இன்று இடம்பெறும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு 18

## பிக்குகள் சென்ற ரயிலுக்கு யாழில் கல்வீச்சு தாக்குதல்

ஒருவருக்கு தலையில் காயம் 18

## அனைத்து தரப்புக்களும் ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 28
ராஜபக்ச அரசின் கொடூர அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள தமிழ் மக்கள் இன்றைய தினம் தமது எதிர்ப்பை ஜனநாயக வழியில், ஹர்த்தாலாக கடைப்பிடிக்கவுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கட்சிகள் விடுத்திருந்த நிலையில் அதனை ஏற்றுக் கொண்டு பல தரப்புக்களும் தமது ஆதரவை வழங்கியுள்ளன. இன்றைய தினம் தமிழர் தாயகத்தின் இயல்புநிலை முடங்கும். 18



கோப்புப்படம்

## பொலிஸாரின் அனுசரணையுடன் ஹர்த்தாலை எதிர்த்து யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 28
தமிழர் தாயகத்தில் இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாண நகரில் 18

## முழு அடைப்புக்கு முழு ஒத்துழைப்பு

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் அழைப்பு

இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை அரசு தடுத்தமைக்கு எதிராக, வடக்கு - கிழக்கு முழுவதும் நடத்தப்படவுள்ள முழு அடைப்பு போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஆதரவை தெரிவித்துள்ளது.

(விரிவு பக்:2)

## 13 தொடர்பில் இந்திய அரசுக்கு என்ன உறுதிமொழி வழங்கினீர்கள்?

ராஜபக்சக்களிடம் கேள்வி எழுப்புகின்றது சிங்கள தேசியவாத அமைப்புகளின் ஒன்றியம்

கொழும்பு, செப். 28
அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிமொழி என்னவென்பதை இலங்கை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும் என்று 18

## இந்தியாவின் பிடியிலிருந்து இலங்கை தப்பவே முடியாது

சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றக் கோரும் இந்தியாவின் அழுங்குப் பிடியிலிருந்தும், அதை நிறைவேற்றுவோம் என்று இலங்கை அளித்துள்ள வாக்குறுதியி 04

## மணிவண்ணன் கட்சியிலிருந்து நீக்கம் புதிய தேசிய அமைப்பாளராக சுரேஸ்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சுரேஸ் மத்திய குழுவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 19

## அளவுக்கேற்ற தேங்காய் விலை

அதிகாரிகள் திடீர் சோதனை 18

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கதவடைப்புக்கு ஒத்துழையுங்கள்

## சிறீதரன் எம்.பி கோரிக்கை

கிளிநொச்சி, செப்.28

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில், இன்று இடம்பெற ஏற்பாடாகியுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க முன்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தற்போதுள்ள அரசு தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை அனுஷ்டிக்க முடியாதவாறு பல்வேறு தடைகளையும் அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டது. எமது அடிப்படை உரிமைகளை நசுக்குவதற்கு யாருக்கும் உரிமையில்லை. மாவீரர்களை, இறந்த எம் உறவுகளை நினைவு கூர்ந்து ஒரு மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலி செய்யக் கூட முடியாதவர்களாகத் தமிழ் இனம் வஞ்சிக்கப்படுகிறது. அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போதும் குரல்வளையை அரசு நசுக்கி இது ஒரு சிங்கள நாடு என்ற செய்தியை அடித்துச் சொல்லி நிற்கிறது. இவை எல்லாவற்றுக்கும் எதிராக நாமும் ஓர் தேசிய இனம், அஞ்சலி செய்தல். நினைவேந்தல் செய்தல் என அனைத்திற்கும் எமக்கு உரிமை உண்டு, இது எமது அடிப்படைச் சுதந்திரம் என்ற செய்தியை உரக்கச் சொல்ல இன்று வடக்கு கிழக்குத் தழுவிய பூரண கதவடைப்புப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கின்றேன்- என்றுள்ளது. (ப)

# உணர்வுகளோடு ஒன்றுபடுவோம்

## கதவடைப்புக்கு கஜதீபன் அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.28

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று இடம்பெறும் கதவடைப்புப் போராட்டத்துக்கு இனமாக ஒன்றுபடுமாறு வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

கடந்த தேர்தல் காலங்களில் நாங்கள் அஞ்சியதைப் போலவே தென்னிலங்கையில் அசுர பலத்தோடும் அடக்குமுறைமிக்க அராஜகத்தனமான சிந்தனைகளோடும் அறுதிப்பெரும்பான்மையோடும், அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியாளர்களால் தமிழ்பேசும் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் அனுபவிக்க ஆரம்பித்திருக்கும் இத்துன்பம் இன்னும் நீண்டு செல்லும் என்பதாகவே சிந்திக்கத் தோன்றுகிறது. அதனொரு ஆரம்பம்தான் எந்தவிதமான வன்முறையும் அற்ற ஜனநாயக ரீதியான மக்களின் ஒன்றுகூடல்கள் தடுத்து நிறுத்தப்படுகின்ற செயற்பாடுகளாக நாங்கள் பார்க்கிறோம். இந்த மோசமான ஜனநாயக அடக்குமுறைகளைச் சுட்டிக் காட்டுவதற்கும் தட்டிக்கேட்பதற்கும் மக்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வுகளோடு செயற்பட்டு வருகின்ற சக்திகள் அத்தனையும் ஒன்று சேர்ந்திருப்பது சிறிய ஆறுதலைத் தந்து நிற்கிறது. இதே ஒற்றுமை உணர்ச்சியோடு இந்த அரசாங்கத்தின் அத்தனை அடக்குமுறைகளையும் எதிர்கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களுடைய பேரவாவாகவும் இருக்கிறது. இச்சிந்தனைகளை அமைதியான வழியில் வெளிப்படுத்தும் முகமாக, எம்மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக இன்று கதவடைப்புப் போராட்டம் இடம்பெறுகிறது என்பதை ஆள்கின்ற அரசாங்கத்திற்கும், மற்றும் அனைவருக்கும் வெளிப்படுத்த வேண்டிய ஒரு வரலாற்றுக்கடமை தமிழ் மக்களாகிய எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. என்றுள்ளது. (ப)

### வடக்கு, கிழக்கில் கதவடைப்பு;

# பரீட்சைகளைப் புறக்கணித்து பல்கலை மாணவர் பேராதரவு

**வடக்கு கிழக்கில் இன்று இடம்பெற ஏற்பாடாகியுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு கல்விச் செயற்பாடுகள், மற்றும் பரீட்சைகளைப் புறக்கணித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் பேராதரவு வழங்கியுள்ளார்.**

இது தொடர்பில் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இராணுவக் கெடுபிடிகள் சம காலத்தில் அதிகரித்திருக்கின்ற சூழ்நிலையானது பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் அவர்களின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கும் ஒரு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் இதனை அரசாங்கமும் கண்டுகொள்ளாத நிலையில் உள்ளது. இறந்தோரை நினைவுகூருவதற்கான தடையை நீதிமன்றம் பிறப்பித்தமையானது சர்வதேச நீதிப்பொறிமுறையைக் கேள்விக்குள்ளாகியிருக்கிறது. அண்மைக் காலமாகப் பாதுகாப்புப் பிரிவினரின் செயற்பாடுகள் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான நெருக்கத்தை மேலும் சிதைவுறச் செய்திருக்கின்றன. இறந்தவர்களை நினைவுகூருவதற்குத் தடைவிதித்த இன்றைய அரசாங்கம் இலங்கையினுடைய நீதித்துறை மீதும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தக் காரணமாக மாற்றியிருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் மக்கள் மீது திணிக்காமல் இறந்தவர்களை உள்ளார்த்தமாக நினைவு கூரும் அரசியல் உரிமையை ஏற்று அங்கீகரிக்க வேண்டும். ஒரு முழுமையான நீதிப்பொறிமுறையின் கீழ் மலர்ந்திருக்கும் இந்தப் புதிய அரசாங்கம், தமிழ் மக்களையும் இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் சமாதானம், நல்லிணக்கம், சமத்துவம், சுதந்திரம், இறைமை போன்ற அம்சங்களுடன் நீண்ட சமாதான நோக்குடன் பயணிக்கும் எண்ணப்பாங்கில் நீடித்த சமாதானமும் மீள் நல்லிணக்கமும் இலங்கையில் நிலைபெற வழிசெய்ய வேண்டும். எனவே தமிழ் மக்களுக்கான நீதியையும் இறந்தவர்களையும் அவர்களது உறவுகள் மற்றும் அவர்களது மனநிலையையும், வெளிப்பாட்டையும் அரசு கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்ற வகையில் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய பூரண செயற்பாட்டு முடக்கப் போராட்டத்துக்கு கல்விச் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகள் முதலியவற்றைப் புறக்கணித்து யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் தமது பூரண ஆதரவை வழங்குகின்றது என்றுள்ளது. (ப)

# உரிமை மீட்புக்காக இணைந்து போராடுவோம்

## ஹர்த்தாலுக்கு ஒவ்வொரு தமிழனும் தார்மீக ஆதரவு வழங்கவேண்டும் என்று கோருகிறார் சரா

> **“ஹர்த்தால் என்பது ஜனநாயக வழியில் எதிர்ப்புக் களை வெளிப்படுத்துவதற்கான ஓர் போராட்டம்தான்”**

எங்களின் உரிமைகளை உரித்துக்களை இன்னொருவர் வந்து பெற்றுத் தரப்போவதில்லை. எங்கள் உரிமைக்காக நாங்கள்தான் போராடவேண்டும். எங்கள் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தும் போராட்டத்தின் ஓர் வடிவம்தான் ஹர்த்தால். நாங்கள் ஒவ்வொருவரும் உரிமை மீட்புக்கான எங்கள் பங்களிப்பை வீடுகளுக்குள் முடங்கியிருந்து இன்று வெளிப்படுத்துவோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழர் தாயகத்திலுள்ள ஒவ்வொரு தமிழனிடமும் அன்புரிமையுடன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ராஜபக்சக்களின் கொடுங்கோல் யுகம், தமிழர்களின் உரிமைகளைப் பிடுங்கத் தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு குடிமகனும் இறந்தவர்களை தனியாகவோ, கூட்டாகவோ நினைவு கூர்வதற்கான உரிமை ஐ.நா.வாலேயே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த உரிமையை, அடிப்படை உரிமையைக் கூட ராஜபக்சக்கள் வழங்குவதற்குத் தயாரில்லை. தமிழர்கள் தங்கள் உரிமையைக் கோரினால் அது அவர்கள் பார்வையில் 'பயங்கரவாதம்'. இவர்களின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழவேண்டியுள்ளது. எங்கள் உரிமைகளைத் தர மறுப்பவர்களிடம் நாங்கள் ஒவ்வொருவரும்தான் அதனைத் தட்டிக் கேட்டுப் பெற்று எடுக்க வேண்டியிருக்கின்றது. தியாக தீபம் திலீபன் தெரிவு செய்த அந்த அஹிம்சை வழியிலேயே நாங்கள் இன்று எங்கள் உரிமைகளைக் கேட்கப் புறப்பட்டிருக்கின்றோம். இந்தப் படை பெரும் படையாக மாறவேண்டும்.

ஹர்த்தால் என்பது ஜனநாயக வழியில் எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதற்கான ஓர் போராட்டம்தான். இதன் ஊடாக என்னத்தைச் சாதிக்க முடியும் என்று எள்ளல் செய்யும் எட்டப்பர்களும் எங்களுக்குள் இருப்பார்கள்தான். எங்களின் ஒற்றுமை - உரிமைக்காக ஓர்மம் என்பனவற்றை வெளிப்படுத்துவதற்கு இந்தப் போராட்டம் உதவும். நாம் ஒவ்வொருவரும் நாமாகவே உணர்ந்து கொண்டு, அவசர, அத்தியாவசிய தேவை தவிர்ந்து வீதிக்கு வராமல் வீடுகளுக்குள் முடங்கி இந்த ஜனநாயகப் போரில் பங்கேற்போம். உரிமை மீட்புக்கான இந்தப் போரில் நாம் ஒவ்வொருவரும் போராளியாவோம். ராஜபக்சக்களுக்கு எதிரான இந்தப் போரில் தமிழர்கள் வெற்றிபெற, நீங்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன , என்றுள்ளது. (ஒ5)

## கூட்டுறவு ஊழியர் சங்கங்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், செப்.28

வடக்கு, கிழக்கில் இன்று இடம்பெறும், கதவடைப்புப் போராட்டத்துக்கு வடமாகாணக் கூட்டுறவு ஊழியர் பொதுச்சங்கமும், யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கமும் பூரண ஆதரவை வழங்கியுள்ளன.

இது தொடர்பில் யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் வே.செல்வகாந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்களுக்கு எதிரான சகலவிதமான அடக்குமுறைகளுக்கும் எதிராக இன்று தமிழ் கட்சிகள் மாத்திரமல்ல தமிழ் இனமே ஒன்று சேர்ந்திருக்கிறது என்பதைச் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறோம். தன்மானம் மிக்க தமிழர்களாக நாங்கள் ஒன்றுபட்டோம் என்பதை இன்று இந்த உலகம் பார்க்கும். அதற்காக ஒவ்வொரு கூட்டுறவாளனும் எந்த எல்லைவரை சென்றேனும் வெற்றி பெறச் செய்வதற்காக எங்கள் ஒவ்வொருவரையும் அர்ப்பணிப்பணித்து களங்காணுவோம்- என்றுள்ளது. (ப)

# இலங்கை ஆசிரிய சங்கம் முழு அடைப்புக்கு ஆதரவு

உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டமையைக் கண்டித்தும், தமிழ் மக்கள் மீதான அரசின் அடக்குமுறைப் போக்கைக் கண்டித்தும் இன்று நடக்கவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இன்று நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த பரீட்சைகளை வேறு தினம் ஒன்றுக்கு மாற்ற வேண்டும் என்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம். இராணுவக் கெடுபிடிகள் நிறைந்திருக்கக் கூடிய இன்று மாணவர்களைப் பாதுகாப்பாக வீட்டில் வைத்திருக்க வேண்டும் என்று பெற்றோரையும் கோருகின்றோம் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அச்சுறுதல்களுக்கும் அஞ்சாமல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அனைத்து ஆசிரியர்களும் திங்கட்கிழமை சுகவீன விடுமுறையை அறிவித்து உரிமை கோரிக்கைக்கு வலு சேர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

இறந்தவர்களை நினைவு கூருவது என்பது உலக அளவில் ஒரு கலாசார உரிமையாகவும், அரசியல் உரிமையாகவும் உள்ளது. பொலிஸார் ஊடாக நீதிமன்றங்களை நாடி அதனூடாக நினைவுகூரும் உரிமைக்கு இன்றைய அரசு தடை ஏற்படுத்தியமையை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

போரின் போதும், போரின் பின்னரும் இறந்தவர்களை, அவர்களது உறவுகள் நினைவு கூருவதை இந்த அரசு அனுமதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள வடக்கு கிழக்கு தழுவிய பூரண முடக்கப் போராட்டது க்கு இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவை தெரிவிக்கின்றது. என்றுள்ளது. (எ-இ)

# இன்றைய முழு அடைப்புக்கு சகலருமே ஒத்துழையுங்கள்!

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அழைப்பு

**யாழ்ப்பாணம், செப். 28**

**தமிழ் மக்களின் விடுதலைக்காக மரணித்துப் போனவர்களை அஞ்சலிக்கும் நிகழ்வுகளை அரசு தடை செய்வதைக் கண்டித்தும், அஞ்சலிப்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமை என்பதை வலியுறுத்தியும் இன்று நடைபெறவிருக்கும் முழு அடைப்புக்கு அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் கோரியுள்ளார்.**

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்களின் விடுதலைக்காக லட்சக்கணக்கான பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கான போராளிகளும் தமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளார்கள். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதும் அவர்களை கௌரவப்படுத்துவதும், அவர்களை நினைவு கூர்வதும் ஒவ்வொரு தமிழனினதும் கடமையாகும். அஞ்சலி என்பது ஐ.நா. சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு செயற்பாடு.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த அஞ்சலி நிகழ்வுகளை கடைப்பிடிப்பது ஒரு போராட்டமாகவே மாறிவருகின்றது. எந்த அரசுஆட்சியில் இருந்தாலும் அந்த அரசுகள் அதனை தடை செய்வதும் நீதிமன்றங்களின் ஊடாக தடைகளைப் பெற்றுக் கொள்வதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இந்த வருடமும் புதிய அரசு ஆட்சிக்கு வந்தவுடன் இந்த அஞ்சலி நிகழ்வுகளுக்கு எதிராக தடைகளைப் பெற்று வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் அஞ்சலி நிகழ்வுகளில் பங்கு கொள்ளக் கூடாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த அஞ்சலி நிகழ்வுகளை நடத்த முற்பட்டபொழுது ஒவ்வோர் இடத்திலும் அதற்கு எதிரான தடைகளை பொலிஸார் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டனர். ஆனால், அரசின் இந்த அடக்குமுறைகளைக் கண்டித்தும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் சாவகச்சேரியில் ஓர் உண்ணாநோன்பை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். இராணுவ பொலிஸ் சுற்றிவளைப்புக்குள் இந்த உண்ணா நோன்பு நடைபெற்றது.

இதன் அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் விடியலுக்காக போராடி மரணித்துப் போன அனைத்து பொதுமக்கள் மற்றும் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் எமது உரிமையை நிலைநாட்டும் பொருட்டு வடக்கு - கிழக்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு ஹர்த்தால் ஊடாக எமது கோரிக்கையை வலியுறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. நாம் அனைவரும் இணைந்து இதனை வலியுறுத்தாவிட்டால் இலங்கை அரசு வடக்கு - கிழக்கை தனது சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்குள் கொண்டுவந்து விடும். அதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை ஏற்கனவே இந்த அரசு எடுத்து வருகின்றது.

இந்தச் சூழலில்தான் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து முழுக்கடையடைப்பு மற்றும் வேலைநிறுத்தத்தைச் செய்து முழுமையான ஹர்த்தாலை கடைப்பிடிக்குமாறு வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (து-20)

# முழு அடைப்புக்கு ஆதரவு கொடுங்கள்

***மட்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்***

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று நடைபெறவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழர் உரிமைகளுக்காக உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த லெப். கேணல் திலீபனை நினைவு கூருவதற்கு நீதிமன்றம் ஊடாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகளை அரசு நிறுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மலையகக் கட்சிகளும் போராட்டத்துக்கு ஆதரவு

வடக்கு, கிழக்கில் இன்று முன்னெடுக்கப்படும் கடையடைப்பு போராட்டத்துக்கு மலையகத்திலுள்ள மூன்று பிரதான கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

மனோ கணேசன் தலைமையிலானஜன நாயக மக்கள் முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவை தமிழ் முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

அந்தக் கூட்டணியின் பிரதித் தலைவர் பதவியை வகிக்கும் இராதாகிருஷ்ணன், தமிழ் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு முற்போக்கு கூட்டணியின் ஆதரவை 'உதயனி'டம் நேற்று உறுதிப்படுத்தினார்.


இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

நினைவேந்தல் நடத்தும் உரிமை அனைவருக்கும் இருக்கின்றது. அந்தக் கோரிக்கை உட்பட மேலும் சில விடயங்களை முன்னிலைப்படுத்தி வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு நாமும் முழு ஆதரவு வழங்குகின்றோம்.

மலையகத்தில் கடைகளை அடைத்து, போராட்டம் நடத்தமுடியாத சூழ்நிலை உள்ளபோதிலும், அவர்களின் நிலைப்பாட்டுடன், கோரிக்கைகளுடன் நாம் ஒத்துப்போகின்றோம். களத்துக்குச்சென்று ஆதரவுதெரிவிக்காவிட்டாலும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் அறவழியிலான நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். அதற்கு எமது ஆதரவு என்றும் இருக்கும்.-என்றார். (எ-44)

# உரிமைகளை மீட்க ஒன்றிணையுங்கள்

## வடக்கு அவைத் தலைவர் அழைப்பு



யாழ்ப்பாணம், செப்.28

தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்தி அதனை வென்றெடுக்க ஒன்றிணையுமாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது சூரியனைக் கையால் மறைக்கின்ற வேலையாகத் தான் தெரிகிறது. ஏனென்றால், ஒவ்வொருவரின் எண்ணத்திலும் உணர்விலும் உள்ள உறவுகளை அரசாங்கத் தடை, நீதிமன்றத் தடைகளின் மூலம் தடுத்துவிடலாம் என்று நினைப்பது சாத்தியமல்ல. இந்நிலையில், எமது போராட்டத்தில் உயிரிழந்த அத்தனை உறவுகளையும், தனியாகவோ கூட்டாகவோ நினைவுகூருகின்ற உரிமை மறுக்கப்படுவதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவற்றை முன்னெடுப்பதற்கான உரிமை எங்களுக்கு உண்டு. சர்வதேச ரீதியாகவும் அந்த உரிமை இருக்கிறது. அந்த உரிமையை மறுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் மக்களின் பங்களிப்பை எதிர்பார்த்துள்ளோம். தற்போது, தமிழ் தேசியக் கட்சிகள் வேறுபாட்டைக் கடந்து ஒன்றிணைந்துள்ளமை தமிழினம் ஒன்றாக நிற்கின்றது என்பதைச் சர்வதேசத்துக்குச் சொல்வதற்காகவும் இந்த அரசாங்கத்துக்குச் சொல்வதற்காகவுமே. அதை இப்போது, எல்லாத் துறை சார்ந்த மக்களும் சொல்ல வேண்டிய அழைப்பை நாங்களும் விடுத்திருக்கிறோம். இன்றைய தினம் எமது உரிமைகளை உறுதிப்படுத்த ஒன்றிணையுமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன், இன்று அனைத்துத் தமிழர்களும் வீடுகளில் இருந்து உயிர்நீத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ப)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்.......

## இந்தியாவின்....

விருந்தும் ராஜபக்ச அரசு தப்பவே முடியாது. இவ்வாறு எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமர் மோடி, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடனான காணொலிக் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் 'உதயன் பத்திரிகை' கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையும் இந்தியாவும் ஒருமித்துச் செயற்படுவதை நாங்கள் வரவேற்கின்றோம். பல துறைகளில் ஒருமித்துச் செயற்படுவதற்கு இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் சம்மதமும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இதுவும் வரவேற்க வேண்டிய விடயம். விசேடமாக இரு நாட்டு மக்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குப் பல வசதிகளை இரு நாட்டு அரசுகளும் செய்துள்ளன. அதுவும் வரவேற்க வேண்டிய விடயம்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் நீதியின் அடிப்படையில் சமத்துவத்தின் அடிப்படையில் கௌரவத்தின் அடிப்படையில் சமாதானத்தின் அடிப்படையில் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே இந்திய அரசின் தொடர்ச்சியான கருத்தாகவும் வலியுறுத்தலாகவும் உள்ளது.

இந்தியாவின் இந்தக் கருத்தை தற்போதைய பாரதப் பிரதமரும் முன்னாள் பிரதமர்களும் தற்போதைய அரசும் முன்னாள் அரசுகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளன.

இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை இலங்கை அரசு நிறைவேற்றியே ஆகவேண்டும்.

அதை நிறைவேற்றுவதற்கு நல்லிணக்கப் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அதேவேளை, அரசமைப்பில் உள்ள சகல விடயங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் பல விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவை முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இதனூடாகத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான உறுதியான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியமானது. இதைப் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசிடம் மீண்டும் இடித்துரைத்துள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவோம் என்று இந்திய அரசிடம் மீண்டும் வாக்குறுதியளித்துள்ளது. எனவே, என்ன நடக்கப் போகின்றது என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம், என்றார்.

(ஒ.5.22)

## முழு அடைப்புக்கு....

ரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி. வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'ஜனநாயகம் மற்றும் மனிதநேய பண்புகளுக்கு கிஞ்சித்தும் இடமளிக்காமல் தற்போதைய அரசு மேற்கொண்டுவரும் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுதிரண்டு இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளன. இதற்கு தமிழ் மக்கள் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஒ.5)

# தமிழர்களை அடிமைப்படுத்தும் நடவடிக்கையில் அரசு தீவிரம்!!

## மட்டக்களப்பு மாநகர முதல்வர் கருத்து

மட்டக்களப்பு, செப். 28

**ஆலய வழிபாடுகளினூடாக மத அனுஷ்டானங்களைப் பின்பற்றி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதால் ஜனநாயகம் மீறப்படபோவதில்லை, விடுதலைப்புலிகள் மீள் உருவாக்கம் பெறப்போவதில்லை. இருந்தும் இந்த அரசு ஏன் தமிழ் மக்களின் மீது இத்தனை அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறது?. தமிழர்களை அடிமைப்படுத்துவதில் அரசு தீவிரமாக ஈடுபடுகின்றது என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.**

தீலிபனின் நினைவேந்தல் தொடர்பாக காத்தான்குடி பொலிஸாரால் வழங்கப்பட்ட தடையுத்தரவு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழ்மக்கள் மீது பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஜனநாயக மீறல்கள் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தணிந்திருந்தது. அக்காலத்தில் ஜனநாயக ரீதியான சகல செயற்பாடுகளையும் எங்களால் மேற்கொள்ள முடிந்திருந்தது. எனினும் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பெருமளவு தடைகள் விதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக எங்களுக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவருக்காக அவரது நினைவு நாளில் ஆத்ம சாந்தி வேண்டி பூஜை செய்வதற்கும், உணவொறுப்பில் ஈடுபடுவதற்கும் எடுத்த முயற்சிக்கு காத்தான்குடி பொலிசாரால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக எனக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கும், ஜனநாயக போராளிகள் கட்சியின் நகுலேஷ் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல உறுப்பினர்களுக்கும் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

ஆலய வழிபாடுகளை மேற்கொள்வதால் ஜனநாயகம் மீறப்படபோவதில்லை, விடுதலைப்புலிகள் மீள் உருவாக்கம் செய்யப்படப்போவதில்லை. இருந்தும் ஏன் தமிழ் மக்களின் மீது இத்தனை அடக்குமுறைகள் விதிக்கப்படுகின்றன. தமிழர்களை அடக்குவதில் இந்த அரசு எவ்வளவு தீவிரமாக ஈடுபடுகின்றது என்பது தற்போது மிகத்தெளிவாகப் புலப்படுகின்றது - என்றார். (ம150)

### இலங்கையில் தரித்துநிற்கும்

# கப்பலில் 17 பேருக்கு கொரோனா தொற்று!

திருகோணமலை துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பலொன்றில் இருக்கும் 17 இந்தியப் பிரஜைகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தில் உள்ள இந்திய எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல், எரிபொருளைக் கொண்டு செல்வதற்காக வருகை தந்துள்ளது. தற்போது கப்பலில் வருகைதந்த ஊழியர்கள் இலங்கைக் கடற்படையினரின் கண்காணிப்பில் உள்ளதுடன், கொரோனா தொற்றுக்குள்ளான 17 இந்தியப் பிரஜைகள் தொடர்பாக எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிக்கவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. (ம-இ)

# மயங்கி வீழ்ந்து நபரொருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 28

கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்ற நபரொருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். குறித்த சம்பவம் தொண்டைமானாறு பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தொண்டைமானாறு கடற்கரை வீதியில் வசிக்கும் அன்ரன் ஜோர்ஜ் (வயது33) என்பவரே உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

# தேரர்கள் நல்லிணக்கப் பயணம்



யாழ்ப்பாணம்,செப்.28

தெற்கிலிருந்து, பௌத்த தேரர்கள் நல்லிணக்கப் பயணமாக நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். சிங்கப்பூர் மகா கருண பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில், ஆசீர்வாத பிரித் ஓதல் சுற்றுலா ரயிலில், சுற்றுலாப் பயணமாக அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

கொரோனோ தொற்றிலிருந்து இலங்கை முற்றாக விடுபட வேண்டும் என்ற நோக்குடன், பௌத்தமத நினைவு தூபியை தாங்கியவாறு ரயில் நேற்று முன்தினம் இரவு வவுனியாவை வந்தடைந்து. அங்கிருந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. இந்தப் பயணத்தில் பௌத்த துறவிகள் மற்றும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்துள்ளனர்.

இனங்களுக்கு இடையில் நல்லுறவு மற்றும் சமாதானத்தை வலிறுத்தி, பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபட்டனர். இதன்போது 275 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

25 கர்ப்பிணிகளுக்கு குழந்தைப் பேற்றின் பின்னரான உதவிப் பொருள்களும், சத்துணவுகளும், 100 பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், 150 பேருக்கு உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார மற்றும் விகாராபதிகள், உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். (சு-20,110)

# உடல் ஆரோக்கியத்துக்கான விழிப்புணர்வு நடைப்பயிற்சி

கிளிநொச்சி.செப்.28

உடற்பயிற்சி மனித ஆரோக்கியத்துக்கு முதன்மைக் காரணி என்ற வகையில் கிளிநொச்சியில் விழிப்புணர்வு நடைப்பயிற்சி நேற்று மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், நடைபயிற்சி மேற்கொள்ளப்பட்டது. நேற்றுக் காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி கரடிபோக்குச் சந்தியில் ஆரம்பித்த நடைபயிற்சி, கிளிநொச்சி மைதானத்தில் நிறைவுற்றது. விழிப்புணர்வு நடைப் பயிற்சியில் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை ரி.யோசுவா, கிளிநொச்சி மாவட்ட மனநல மருத்துவர் ம. ஜெயராசா, மருத்துவர் தவராசா, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆனந்தராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (சு-214)



## போதை விருந்து; 9 இளைஞர்கள் கைது

நண்பர் குழுவொன்றினால் நடத்தப்பட்ட விருந்து நிகழ்வொன்று சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த 9 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தொலைபேசி ஊடாக நண்பர்களாக இணைந்த குழுவினரால் காலி, தெலிகடப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மாலை இந் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது 5 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளுடன் பெண்கள் உட்பட 9 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 40 போதை உருண்டைகள், 1 லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான 20 போதை மாத்திரைகள், 2 லட்சம் ரூபா பணம் மற்றும் எம்.டீ.எம் என்ற போதைப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் கண்டி மற்றும் கொழும்பைச் சேர்ந்த 25 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள். சுற்றிவளைக்கும் போது அவர்கள் அனைவரும் போதைபொருள் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள் எனத் தெலிகடப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## கோடீஸ்வரரின் புதல்வர்கள் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, செப்.28

பிரான்ஸில் வர்த்தக நடவடிக்கைளில் ஈடுபடும் இலங்கைக் கோடீஸ்வரத் தம்பதியினரின் மகன்மார் இருவர் போதைப் பொருளுடன் கொழும்பில் கைதாகினர். பிரான்ஸிலிருந்து பெற்றோர் அனுப்பும் பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்த இருவரும் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதுடன். போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். இந் நிலையில் 5 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் இருவரும் கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் கொச்சிக்கடை, பல்லன்சேன பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இருவரும் நாளுக்கு 7ஆயிரம் ரூபாவரை போதைப்பொருளுக்காகச் செலவிடுவதாகத் தெரியவருகிறது. இருவரும் சிறிது காலம் விமான நிறுவனம் ஒன்றில் சேவை செய்துள்ளபோதிலும் போதைப் பொருள் பயன்பாடு காரணமாக தொழிலை இழந்துள்ளனர். (வ-இ)





## வானிலிருந்து வீழ்ந்தன மர்மப்பொருள்கள்

*அச்சத்தில் அப்பகுதி மக்கள்*

கொழும்பு,செப்.28

திம்புலாகல தலுகான மற்றும் நாமல் போகுனவில், பகுதிகளில் வானில் இருந்து மர்மப்பொருள்கள் தொடர்ந்து வீழ்ந்தமையால், அந்தப் பகுதி மக்கள் மிகுந்த அச்சமடைந்தனர்.

தாவரங்கள் மற்றும் ஏழு மின் இணைப்புகளின் மீது இந்த மர்மப்பொருள்கள் வீழ்ந்துள்ளன என்று கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை முதல் மாலை வரை இந்த மர்மப்பொருள்கள் அவ்வப்போது வானத்திலிருந்து விழுந்துள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பொருள்கள் சிலந்தி வலைகளைப் போன்றவை. தொடும் போது ஒட்டும் தன்மையைக் கொண்டவை என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (க-இ)

# சுகாதாரப் பரிந்துரைகள் கிடைத்தால் விமான நிலையங்கள் திறக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு,செப்.28**

**சுகாதாரப் பிரிவின் பரிந்துரைகள் கிடைத்தால், அனைத்து விமான நிலையங்களையும் பயணிகள் செயற்பாட்டுக்காக திறப்பதற்குத் தயாராகவுள்ளோம் என்று இராஜாங்க அமைச்சர் டீ.வீ.சானக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டிலுள்ள சுகாதார வசதி மற்றும் எங்களால் ஏற்றுக் கொள்ள கூடிய நோயாளிகளின் அளவுக்கு அமைவாக விமான நிலையங்களைத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்படும். விமான நிலையத்துடன் தொடர்புடைய மற்றுமொரு பிரதான விடயமாக சுற்றுலாத் துறை உள்ளது.

அது முழுமையாகத் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை மாத்திரம் வைத்து, சுற்றுலாத் துறையை நடத்திச் செல்வது சிரமம்.

எனவேதான் சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டை திறக்க எதிர்பார்க்கப்படுகின்றது. சில நேரங்களில் அது சிறிய குழுக்களுக்கு அல்லது தனி நபர்களுக்காகத் திறக்கப்படலாம். சுகாதாரப் பரிந்துரை மற்றும் உரிய தரப்பின் பரிந்துரைகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (க-இ)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரங்கள் பறிமுதல்

மட்டக்களப்பு,செப்.28

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலிபாய்ந்தகல் பகுதியில், அனுமதிப்பத்திர விதிகளை மீறி, மணல் ஏற்றிச் சென்ற இரண்டு உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.



இதன் போது இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் சட்டவிரோத மரம் கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

அவற்றைத் தடுப்பதற்கு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பிரதேசத்துக்கான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.சி.என்.ஜயசுந்தர தெரிவித்தார். (க-150)

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

பளை,செப்.28

மாமுனையில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டு, அங்கிருந்த கோடா பரலுடன், சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாமுனை செம்பியன்பற்றுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது என பளை பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து அந்தப் பகுதியை நேற்றுச் சுற்றி வளைத்த பொலிஸார், குளக் கரையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட் டில் ஒருவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 1 பரல் கோடாவும், கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. உற்பத்தி நிலையமும் அழிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணையின் பின்னர், நீதிமன்றில் முற்படுத்தப்படுவார். சந்தேகநபருக்கு எதிராக ஏற்கனவே 3 வழக்குகள் நீதிமன்றில் உள்ளன என்று பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)




## தியாகி திலீபனுக்கு ஜேர்மனியில் அஞ்சலி

பேர்லின்,செப்.28

தியாக தீபம் திலீபனின் 33 ஆவது நினைவேந்தல், ஜேர்மனியில் வாழும் தமிழர்களால் மிகவும் உணர்வுபூர்வமாக நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்ததை நினைவேந்தும் வகையில் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து மாலையில் திலீபனின் படத்துக்கு வணக்கம் செலுத்தி அஞ்சலிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (க-இ)

## டெங்குத் தொற்றால் 30 பேர் உயிரிழப்பு



கொழும்பு,செப்.28

இலங்கையில் டெங்குத் தொற்றுக் காரணமாக இதுவரையில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தகவலை தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு இயக்குநர் அருண ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

"கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. எனினும் எதிர்வரும் நாள்களில் மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நீடித்தால், டெங்கின் தாக்கம் அதிகரிக்கக்கூடும்" என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (க-இ)

## லொறியில் சிக்கி இந்தியர் உயிரிழப்பு

லொறி ஒன்றில் சிக்கி இந்தியப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். ஹோமாகம, கட்டுவான வீதியில் அமைந்துள்ள தொழிற்சாலையில் லொறியொன்றில் பொருள்களை ஏற்றும்போது, லொறியின் 'பிரேக்' செயலிழந்தது.

இதன் காரணமாக லொறி பின்னோக்கி நகர்ந்தமையால், அதில் சிக்குண்ட அந்த நபர் உயிரிழந்துள்ளார். இதையடுத்து லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள் ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)





வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், போராட்டப் பந்தலில் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்தைக் காட்சிப்படுத்தி, மலர் தூவி, மெழுகுவர்த்திகள் ஏற்றி நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தினர். (க)

## தொற்றுநோய் கட்டுப்பாட்டில் இலங்கைக்கு இரண்டாமிடம்

கொழும்பு,செப்.28
சீன நிறுவனமொன்று நடத்திய தொற்று நோய்க் கட்டுப்பாடு தொடர்பான உலக ஆய்வில், இலங்கை 2 ஆவது இடத்தையும், சீனா முதலாவது இடத்தையும் பிடித்துள்ளன. சீனாவின் YICAI ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய தொற்றுநோய்க் கட்டுப்பாடு தொடர்பான உலகளவிலான ஆய்விலேயே இலங்கைக்கு இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.
இந்த நிலையில், "இலங்கை எந்தவொரு சார்பும் இல்லாமல் உலகளாவிய அங்கீகாரத்துக்கு முற்றிலும் தகுதியானது." என்று கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் ருவிற்றரில் பதிவு செய்துள்ளது. (க-இ)

## நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி

### வியாழேந்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு,செப்.28
**பொருளாதார ரீதியான பெரும் சவாலுக்கு இந்த அரசு முகம்கொடுத்துள்ளது. ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் சுற்றுலாத்துறை பெரும் வீழ்ச்சி கண்டது. அதனால் பொருளாதாரத்துறை பெரும் பின்னடைவை எதிர்கொண்டது. தற்போது கொரோனா பெரும் சவாலாகவுள்ளது.**

இவ்வாறு தபால் சேவைகள், வெகுஜன ஊடகத்துறை, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு,வின்சன்ட் தேசிய பாடசாலையின் 200 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும், நினைவு முத்திரை வெளியீடும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,
முழு உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனாவால் வளர்ச்சியடைந்த நாடுகளே திணறிக் கொண்டிருக்கின்றன. எமது நாடும் பொருளாதார ரீதியாகவும், அபிவிருத்தி ரீதியாகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.
இதற்காக பல வேலைத்திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகின்றது.
இந்த அரசு பதவியேற்று குறுகிய காலத்துக்குள்ளேயே 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியது.
அதேபோன்று க.பொ.த.சாதாரண தரத்தைத் தவறவிட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் மூன்று தேசிய பாடசாலைகளை விரைவாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு பல திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது.என்றார். (க-இ)

## ரஷ்யப் பிரஜை விடுவிக்கப்பட்டார்

கொழும்பு,செப்.28
இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானார் என்று சந்தேகிக்கப்பட்ட ரஷ்யப் பிரஜைக்கு, இறுதி பி.சி.ஆர். சோதனை மூலம் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.
அதனையடுத்து அவர் அம்பாந்தோட்டை மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.
குறித்த நபர் ரஷ்யாவுக்கு மீண்டும் திரும்ப அனுமதிக்கப்படுவார் என்று சுகாதார அமைச்சின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் சுதாத் சமரவீர தெரிவித்துள்ளார். ரஷ்யப் பிரஜை கடந்த 13 ஆம் திகதி ரஷ்யாவுக்குச் சொந்தமான விமானத்தில் நாட்டுக்கு வந்துள்ளார். அவருடன் மேலும் 15 பேர் விமானத்தில் வருகை தந்துள்ளனர்.
விமான நிலையத்தில் அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது, தொற்று ஏற்பட்டுள்ளமை இனங்காணப்படவில்லை.
அதன் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு பரிசோதனை மேற்கொண்ட போதே தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-இ)

## தங்க விலை மேலும் குறையலாம்



கொழும்பு,செப்.28
எதிர்காலத்தில் தங்கத்தின் விலை மேலும் குறையக்கூடும் என்று தேசிய ரத்தின மற்றும் நகை ஆணையம் தெரிவித்துள்ளது.
அத்துடன் நாட்டில் தங்க இருப்புக்குப் பஞ்சமில்லை என்று தேசிய ரத்தின மற்றும் நகை ஆணையத்தின் இயக்குநர் ஜெனரல் ஹர்ஷா இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.
நாட்டுக்கு ஆண்டுக்கு சுமார் 10 தொன் தங்கம் தேவைப்படுகிறது. தற்போது நாட்டில் தங்கத்தின் தேவை உள்ளது.
தற்போது 22 கரட் தங்கத்தின் சந்தை மதிப்பு 90 ஆயிரம் ரூபா முதல் 92 ஆயிரம் ரூபா வரை உள்ளது. உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை (31.1034768 கிராம் அதாவது சுமார் 4 பவுண்) 21 ஆம் திகதியுடன் ஒப்பிடும் போது 23 ஆம் திகதிக்குள் 66 அமெரிக்க டொலரால் குறைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

## தலைமையை ஏற்கத் தயார்

### மங்கள அதிரடி அறிவிப்பு



கொழும்பு,செப்.28
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை, பரிசீலிக்கத் தயாராக உள்ளேன் என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர அதிரடியாக அறிவித்துள்ளார்.
மாத்தறையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
நான் ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறவில்லை. கட்சியில் உறுப்பினராகத் தற்போதும் உள்ளேன்.
எனவே சரியான தலைவர் மூலம் கட்சியை மீளவும் புத்துணர்ச்சியுடன் முன்கொண்டு செல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட மங்கள சமரவீர, கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

## வாகனங்களின் விற்பனை தாராளம்

கொழும்பு,செப்.28
இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் சுமார் 90 சதவீதமானவை விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று சிலோன் ஓட்டோ மொபைல் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரிஞ்சிகே தெரிவித்துள்ளார்.
கடந்த 6 மாதங்களாக நாட்டுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்வதை, அரசு தற்காலிகமாக நிறுத்தியதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
எனினும் தற்போது நாட்டில் வாகனங்களுக்கான தேவை அதிகரித்துள்ளது.
இதன் காரணமாக நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)





## தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் நுழையேன்

### ரணில் பிடிவாதம்

கொழும்பு,செப்.28
தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல மாட்டேன் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் இந்தத் தகவலை ரணில் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே ஒரு தேசியப்பட்டியல் ஆசனமே கிடைத்துள்ளது.
எனினும் அந்த ஆசனத்துக்கு இன்னும் எவரும் நியமிக்கப்படவில்லை.
இந்த ஆசனத்தை தமக்குத் தருமாறு கட்சியிலுள்ள பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.
இந்த நிலையில் ரணிலே அந்த ஆசனத்தினூடாக நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்றும் பலர் கோரியுள்ளனர்.
எனினும் இதற்கு ரணில் மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# புள்ளிகள் பூச்சியமானால் லைசன்ஸ் இரத்து

## புதிய முறை விரைவில்

சாரதி அனுமதிப்பத்திரங்களுக்குப் புள்ளி வழங்கும் முறை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது என ராஜாங்க அமைச்சர் திலும்அமுனுகமதெரிவித்துள்ளார். புதிய சாரதி அனுமதிப் பத்திரத்துக்கமைய சாரதி ஒருவர் இழைக்கும்போக்குவரத்துகுற்றங்களுக்காக சாரதி அனுமதிப்பத்திரத்திலுள்ள புள்ளிகள்குறைக்கப்படும்.புள்ளிகள் குறைவடைந்துபூச்சியத்துக்குச்சென்றால் அந்நபரின்சாரதிஅனுமதிப்பத்திரம்நிராகரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மேலும் சாரதி அனுமதிப்பத்திரம் நிராகரிக்கப்பட்ட ஒருவர் புதிய சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(வ-இ)

# பிரிட்டன் பொலிஸ் அதிகாரி இலங்கையரால் சுட்டுக்கொலை

பிரிட்டனில் பொலிஸ் அதிகாரி ஒருவர் லண்டனில் உள்ள பொலிஸ் நிலையத்தில் வைத்து இலங்கை இளைஞன் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பொலிஸ் அதிகாரியை துப்பாக்கி யால் சுட்ட இளைஞன் தன்னைத் தானே சுட்டதால் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

(வ-இ)

# இலங்கையை 5 பிராந்தியங்களாக வகுக்கும் தமிழர் தரப்புத் திட்டம்

## கரிசனை செலுத்தும் பிரதமர்

கொழும்பு, செப்.28

இலங்கையை ஐந்து பிராந்தியங்களாகப் பிரிக்கும் முன்மொழிவு ஒன்றை தமிழ்த் தரப்பு முக்கியஸ்தர் ஒருவர், பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ வின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார். இது தொடர்பில் கரிசணை செலுத்தியுள்ள பிரதமர், முன்மொழிவுதொடர்பானவரைவைதன்னிடம் கையளிக்குமாறு கோரியுள்ளார் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பில் தெரியவந்துள்ளதாவது, தமிழர் தரப்பின் முக்கியஸ்தர் ஒருவருடன் பிரதமர்புதியஅரசமைப்புதொடர்பில்கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கையைமூன்றுஅலகுகளாக பிரிப்பதற்கான பரிந்துரைகள் கிடைத்திருப்ப தாக பிரதமர் தெரிவித்துள்ளார். அதற்குப் பதிலளித்த தமிழ் முக்கியஸ்தர், மூன்று அலகுகளாக வகுப்பது சுமுகமான சூழலுக்குப் பதிலாக நாட்டில் மேலும் நெருக்கடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன், மூன்று மாகாணங்களாக வகுப்பதை விடவும் தமிழ்த் தரப்பினால் ஏற்கனவே ஐந்து பிராந்தியங்களாக வகுக்கும் யோசனை முன்வைக்கப்பட்டிருப்பதையும் அந்தப் பிரமுகர் பிரதமரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

அதனையடுத்து பிரதமர் அந்த முன்மொழிவை தன்னிடத்தில் கையளிக்கும் படி கேட்டுக்கொண்டுள்ளதோடுதமிழர்களும் புதியஅரசமைப்புச்செயற்பாட்டில்பங்கேற்பது அவசியம் என்றும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

(வ-இ)

# 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

## முனீஸ்வரன் யவனராம்



மண்ணில் 16.03.2001

விண்ணில் 15.08.2020

கடந்த 15.08.2020 அன்று
சிவபத மடைந்த எமது அன்பு மகன்
அமரர் முனீஸ்வரன் யவனராம்
அவர்களின்
45 ஆம் நினைவு நாளையொட்டிய
கிரியைகள் 25.09.2020
வெள்ளிக்கிழமை கீரிமலை
புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று
(28.09.2020) திங்கட்கிழமை
அன்னாரின் இல்லத்தில் இடம்பெற
உள்ளதால் அத்தருணம் அன்னாரின்
ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்)

திரு. திருமதி முனீஸ்வரன்
குடும்பத்தினர்
04 ஆம் வட்டாரம் முள்ளியவளை.
முல்லைத்தீவு.

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் ஸ்ரீமான் கலாநிதி இளையதம்பி விக்னராசா (J.P)



குழந்தையாய் மண்ணில்
22.12.1924

தெய்வமாய் விண்ணில்
08.10.2011

திதி: துவாதசி (28.09.2020)

*மகனின் மனதிலிருந்து....*

உருவம் தந்து உயிர் தந்து - எம்
உயிருடன் உணர்வுகளுடன் ஒன்றித்த
உத்தமருக்கு - உங்கள் உயிருடன்
உணர்வுகளுடன் கலந்த
உங்கள் உயிர்க் குழந்தைகளின் உறுதி மொழிகள்.

உங்களுடன் களித்த அந்தக் கணப்பொழுதுகளில்
நாம் அனுபவித்த அன்பு அரவணைப்பு
பாதுகாப்பு பாசம் - அனைத்தும்
ஒரு நொடியில் கனவாகிப் போன சோகம்
உலகமே சூனியமான அந்தக் கணம்
இதயத்தில் வேல் பாய்ந்த அந்த வினாடிகள் ...
விழிகளில் நீருடன் விரக்தியின் விளிம்பில் நாம் .

எனினும் நாம் பிள்ளைகள் - பீனிக்ஸ்
போல் மீண்டும் எழுவோம் உங்களுக்காக
உங்கள் கனவுகளை, இலட்சியங்களை
நனவாக்குவோம் - அம்மாவின் நிழலின் கீழ்.

அப்பா !
உங்கள் இலட்சியங்களையும்
உயிருடன் கலந்த நினைவுகளையும்
சுமந்து நிற்போம் - எம் உடல்கள்
எம் உயிரைச் சுமக்க மறுக்கும் வரை....

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஆயாக்கடவை ஐங்கரனை இறைஞ்சுகின்றோம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

என்றும் அன்புள்ள பாச மகன்
வி.வன்னியநாதன் (ஜேர்மனி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முழுஅடைப்பு: உரிமைக்கான இன்னுமொரு குரல்

நினைவேந்தலுக்கான உரிமை மறுக்கப்பட்டதையும், அரச அதிகாரத்தின் கொடுங்கோன்மையையும் எதிர்த்து இன்று தமிழர் தாயகமெங்கும் முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வழக்கமாக முழு அடைப்பு என்றால் அதுவும் ஒருவகை விடுமுறை நாளாகக் கழிந்துபோவதுண்டு. ஆனால் இன்றைய முழு அடைப்பு அப்படியானதல்ல. எந்தவொரு அரசியல் இலாபமும் அற்று தனியே ஓர் இனத்தின் கண்ணீர்விடும் உரிமைகூட மறுக்கப்பட்டதை எதிர்த்து நீதிகேட்கும் ஒரு முழு அடைப்பு. எனவே இந்த முழு அடைப்புக்கு தாயகத்தில் வாழும் தமிழர்கள் அனைவரும் உணர்வுபூர்வமாக ஒத்துழைப்பு நல்க வேண்டியது அவசியமாகும்.

நினைவேந்தல்கள் எவையுமே வன்முறையைத் தூண்டுபவை அல்ல. எங்கள் இனத்துக்காக தங்கள் இன்னுயிரை ஈந்தவர்களை மீள ஒருமுறை நினைந்தேற்றுதல் எந்த வகையிலும் ஒரு நாட்டின் இறையாண்மையை மீறப்போவதில்லை. கடந்த காலங்களில் திலீபனை மட்டுமல்லாது மாவீரர் நாளையும் தமிழர் தேசம் உணர்வுபூர்வமாக நினைவேந்தியிருந்தது. கண்களில் நீரும் கைகளில் தீபங்களுமாக மக்கள் தங்களுக்காக மடிந்த மண்ணின் மைந்தர்களை பூசித்திருந்தார்கள். இதன்போதெல்லாம் மக்களை எவரும் பலவந்தமாக நினைவேந்தல் நடைபெறும் இடங்களுக்கு அழைத்து வந்ததில்லை. அவர்களின் நெஞ்சுக்குள் கனன்றுகொண்டிருந்த உணர்வுத்தீ நினைவேந்தும் இடங்களுக்கு பயணிக்க உந்தித்தள்ளியது. வன்முறையின் ஒருசிறு துளிகூட இந்த நினைவேந்தல்களில் வெளிப்பட்டதில்லை.

அப்படியானால் ஏன் இவற்றைத் தடைசெய்ய அரசு இவ்வளவு தீவிரமாக இருக்கின்றது?. அதற்கும் காரணம் இருக்கின்றது. அணைந்து போய்விட்டதாக அதிகாரத் தரப்பு நினைக்கின்ற உரிமைக்கான வேட்கையை நினைவேந்தல்கள் இரைமீட்க வல்லவையாக அமைகின்றன. ஆயுதங்களை விடவும் ஞாபகங்கள் வலியவை. அவை மெல்லமெல்ல உருக்கொண்டு சாதாரண மனிதனைக்கூட நீதிக்காகப் போராடும் போராளியாக மாற்றிவிடக் கூடியவை. யூதர்கள் தங்கள் தேசத்தை மூவாயிரம் வருடங்களுக்கு மேலாக ஞாபக அடுக்குகளில் மட்டுமே சுமந்து திரிந்தவர்கள். பின்னர் அதுவே யதார்த்த உலகிலும் ஞாபகங்களின் திரட்சி மூலம் வல்லரசொன்றை உருவாக்கும் வல்லமையைக் கொடுத்தது. அதுபோன்றே எங்களுக்குள் இருக்கும் ஞாபகங்களும் என்றோ ஒருநாள் அதிகாரத்துக்கு எதிராக விஸ்வரூபம் கொள்ளக்கூடும் என்று ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர்.

'டேர்மினேட்டர்' படங்களைப் பார்த்திருப்பீர்கள். அதில் எதிர்காலத்தில் தங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடியவர்களை காலப்பயணத்தின் ஊடாக நிகழ்காலத்துக்குள் நுழையும் ரோபோக்கள் அழிக்க எத்தனிக்கும். அதுபோலவே எதிர்காலத்தில் தங்களுக்கு எவையெல்லாம் பிரச்சினையாக உருவெடுக்கக்கூடியவை என்று அதிகாரத்தரப்பு நினைக்கும் ஞாபகங்களையெல்லாம் ஒவ்வொன்றாக இல்லாது அழிக்கும் வேலை தொடங்கிவிட்டது. மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து புலிகளின் தலைவர் பிரபாகரனின் வீடுவரை தூலமாக இருக்கும் நினைவுச் சின்னங்கள் எல்லாவற்றையும் அழித்தாயிற்று. எஞ்சியிருப்பவை இந்த நினைவேந்தல்கள் மாத்திரமே. அவற்றையும் இல்லாது செய்துவிட்டால் தமிழர்களின் ஞாபகங்களில், உரிமைக்கான போர் நடந்த தடயத்தை துடைத்தழித்துவிட முடியும். அதையே சிங்களப் பேரினவாதமும் விரும்புகின்றது. நினைவேந்தல்களுக்குத் தடையும் போடுகின்றது.

போரிலே தோற்றுவிட்டோம் என்பதற்காக எங்களுக்கான மிகச் சாதாரண உரிமைகளைக்கூட பேரினவாதத்தின் சப்பாத்துக் கால்கள் நசுக்கிச் செல்வதை அனுமதிக்க முடியாது. எங்களுக்காகவே போராடி, எங்களுக்காகவே மடிந்தவர்களுக்காக ஒருசொட்டுக் கண்ணீர்கூட விட அனுமதியில்லை என்றால் ஜனநாயகம் என்ற சொல் இருப்பதில் அர்த்தம் இல்லையே. கண்ணீர் விடுவதும் தீபம் ஏற்றுவதும் பூச்சொரிவதும் திருவுருவப்படத்தை அஞ்சலிப்பதும் வன்முறையின் வடிவங்கள் அல்ல என்பதை அதிகாரத்துக்குப் புரியும் மொழியில் சொல்வது அவசியம். அப்படியான ஒரு மொழிதான் இந்த முழு அடைப்பு. ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசமும் ஒருநாள் முடங்கும்போது கொஞ்சமேனும் எங்களுக்கான நினைவேந்தல் உரிமையை விட்டுத்தர வேண்டுமென்ற நெருக்குவாரம் அதிகரிக்கும். எதிர்காலத்தில் எந்தவித இடையூறும் இன்றி மண்ணுக்காக மடிந்த மறவர்களையும் மக்களையும் நினைவுகூர வேண்டுமானால் உரிமைக்கான இன்னொரு குரலான இன்றைய முழு அடைப்பு வெற்றிபெற வேண்டியது காலத்தின் தேவை.

# திருத்தம் 13 முழுமையாக நடைமுறையாக வேண்டும்

*மோடியின் வலியுறுத்தலை வரவேற்கிறது தமிழ் முற்போக்கு கூட்டணி*

**கொழும்பு, செப். 28**

**'13 நீக்கப்படவேண்டும் என்ற கோஷம் இலங்கையில் எழுந்துள்ள நிலையில், 13ஆவது திருத்தச்சட்டம் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இந்திய பிரதமர் விடுத்துள்ள அறிவிப்பானது, தமிழ் பேசும் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளது' என்று தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.**

இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் காணொளி மூலம் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். .

'13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசுக்கு மீண்டும் அழுத்தம் கொடுத்திருப்பதை சிறுபான்மை கட்சியொன்றின் தலைவர் என்ற வகையில் வரவேற்கின்றேன். இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கையில் உள்ள சிறுபான்மை மக்களுக்கு தமது உரிமைகளை பாதுகாத்து கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

மாகாணசபை முறை மூலம் சிறப்பான சேவைகளை வழங்க முடியும். கடந்த காலங்களிலும் வழங்கப்பட்டுள்ளன. நானும் மாகாண சபையில் அமைச்சராக இருந்தவன்' என்றார். (ம-44)

## 1024 கிலோ மஞ்சள் மீட்பு

மன்னார்,செப்.28

மகேந்திரா ரக வாகனத்தில், பதுக்கி வைக்கப்பட்டிருந்த, ஒரு தொகுதி மஞ்சள் கட்டி மூடைகள் பேசாலை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டன. பேசாலை விசேட புலனாய்வுத் துறைக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெரிய கரிசல் பகுதியில் குறித்து மூடைகள் கைப்பற்றப்பட்டன. சுமார் ஆயிரத்து 24 கிலோ 200 கிராம் மஞ்சள் கட்டிகள் அடங்கிய மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் எவரும் இனங்காணப்படாத நிலையில், மஞ்சள் மூடைகள் பேசாலை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்தியாவில் இருந்து மஞ்சள் கடத்தப்படும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. பேசாலை பொலிஸாரால் கடந்த ஒரு மாத கால இடைவெளிக்குள் மூன்று தடவைகள் இத்தகைய மஞ்சள் கடத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-56)




## வீதி விபத்தில் சிறுவன் சாவு!!

மட்டக்களப்பு, செப். 28

தந்தைக்கு உதவியாக வீதியோர வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சிறுவன் எதிர்பாராத வீதி விபத்தில் உயிரிழந்தான் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு தேத்தாத்தீவு பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் புதிய காத்தான்குடி பகுதியில் வசிக்கும் 12 வயதுடைய முஹம்மது அலியார் முஹம்மது ருஷ்கி என்ற சிறுவனே உயிரிழந்தான். வீதியால் சென்றுகொண்டிருந்த கார் ஒன்று அதன் சில்லு ஒன்றின் காற்று சடுதியாக வெளியேறிய நிலையில் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவை மோதியுள்ளது. ஓட்டோ சிறுவனை மோதியுள்ளது. விபத்தில் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-இ)

## தலைகீழாக நின்றாலும் நினைவேந்த தடையே!!



*அம்பிட்டிய சுமணரத்ன தேரர் சீண்டல்*

கொழும்பு, செப். 28

'ஹர்த்தால் அல்ல தமிழ் அடிப்படைவாதக் கட்சிகள் தலைகீழாக நின்றாலும், பயங்கரவாதிகளுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கான உரிமை வழங்கப்படக்கூடாது' என்று அம்பிட்டிய சுமணரத்ன தேரர் இன்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தியும் தமிழர் தாயகத்தில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அடிப்படைவாத கட்சிகளின் தாளத்துக்கேற்ப அரசு ஆடக்கூடாது. பயங்கரவாதிகளை நினைவுகூரும் உரிமையை வென்றெடுத்து தவறான முன்னுதாரணத்தை வழங்குவதற்கே போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை அரசு கருத்திற்கொள்ளக்கூடாது. ஏனெனில் தமிழ் அடிப்படைவாத கட்சிகளின் அரசியல் கொள்கையே இதுதான்.' என்றார். (ம-44)

# இன்றைய நாள்

**மேடம்:** அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும். குடும்பத்தினருடன் இருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்:** சங்கடங்கள் தீரும். எதையும் கனிவாகச் சொல்லுங்கள். அலைச்சல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். வயிறு சம்மந்தமான உபாதைகள் தீரும்.

**மிதுனம்:** பணியாளர்கள் வெறுப்பின்றிச் செயல்படுங்கள். மனச்சாட்சிபடி செயல்படுவது நல்லது. கடன் பாக்கிகள் வசூலா வதில் கவலை சூழும். விமர்சனங்கள் மனஉளைச்சல் தரும்.

**கடகம்:** தள்ளிப்போட்ட வேலைகளை முடிப்பீர்கள். பணியாளர்களுக்குத் தடை தாமதங்கள் இருக்கும். மருத்துவ செலவு வந்து நீங்கும். மின்னணு சாதனங்கள் தொல்லை தரும்.

**சிம்மம்:** பெண்கள் கவனமாக இருக்க வேண்டும். பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை கிடைக்கும். பிள்ளைகளுக்காக நீங்கள் எதிர்கொள்ளும் சிரமம் வீண் போகாது.

**கன்னி:** பொறுமைக்கான நற்பலன் உண்டு. உங்களால் பிறர் பயனடைவர். சந்திக்க நினைத்த ஒருவரைத் தொடர்பு கொள்வீர்கள். சவாலான பணிகளை முடிப்பீர்கள்.

**துலாம்:** பெருமைகளைப் பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மாற்றம் நிகழும். பிரபலங்களால் ஆதாயம் அடைவீர்கள். நீங்களாக முந்திக் கொண்டு வழக்குப்போட வேண்டாம்.

**விருச்சிகம்:** விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். பெண்கள் பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்வீர்கள்.

**தனுசு:** பிள்ளைகளால் வந்த சங்கடம் தீரும். வியாபாரம் சூடு பிடிக்கும். உங்களால் பயனடைந்தவர்கள் நன்றி பாராட்டுவார்கள்.

**மகரம்:** புதியவர்களை நம்ப வேண்டாம். விரும்பிய பொருள் கைக்கு வரும். பணியாளர்களுக்குச் சிறு தொல்லை ஏற்படக்கூடும். விருப்பங்களை நிறை வேற்றுவீர்கள்.

**கும்பம்:** எதிரியின் பலம் எது, பலவீனம் எது என அறிவீர்கள். தேவைகள் நிறைவேறும். பணியிடத்தில் பொறுப்பு கூடும். நல்லவர்களின் உதவி கிடைக்கும்.

**மீனம்:** எதிர்ப்புகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். நண்பர்களால் சிறு வருத்தம் ஏற்படும். வீட்டுச் செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் லாபமடைவீர்கள்.

# கொரோனா வைரஸுக்கு மூலிகையால் மருந்து!

## கிட்டியது அனுமதி



மட்டக்களப்பு, செப். 28

**கொரோனா பெருந்தொற்றுப் பரவலைத் தடுக்கும் வகையில் ஓட்டமாவடி சித்தீக் றிப்ஹா என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட மூலிகை மருந்து இலங்கைப் புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.**

கொரோனாவை இலங்கையில் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு புதிய கண்டுபிடிப்புக்களைக் கோரியிருந்தது. இதனடிப்படையில், ஓட்டமாவடி சித்தீக் றிப்ஹா மூலிகைகள் அடங்கிய ஆயுர்வேத மருந்தொன்றைக் கண்டுபிடித்திருந்தார். சுமார் 28 மூலிகைகளை ஒருமாத காலமாக பரிசீலனை செய்து, அதிலிருந்து அனைத்து வயதினர் மற்றும் அனைத்துவித நோயாளர்களுக்கும் ஏற்ற வகையில் அவர்களது உடலில் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் மூலக்கூறுகள் அடங்கிய 8 வகையான மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்தை அவர் அறிமுகப்படுத்தினார். குறித்த மருந்தை கொரோனா தொற்றுள்ளவர்களுக்கு வழங்கிய போது நோயெதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், நோயைக் கட்டுப்படுத்தவும் வாய்ப்பாக அமைந்ததனைக் கருத்தில் கொண்டு, அது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. (ம-இ)



# இரண்டு பாடசாலைகளுக்கு முகக்கவசங்கள் கையளிப்பு


கிளிநொச்சி,செப்.28

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை மற்றும் செல்வாநகர் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதி உதவியுடன், வெளிச்சம் அறக்கட்டளையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஊடாக, பாடசாலையின் அதிபர்களிடம் இந்த முகக்கவசங்கள் கையளிக்கப்பட்டன. (க-222)

# நெல் கொள்வனவுக்காக சமாசங்களுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம்,செப்.28



எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையின்போது, அறுவடை செய்யப்படும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு, கூட்டுறவு சங்கங்களின் அரிசி ஆலைகளுக்கு கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

கடந்த சிறுபோகத்தின் போது, வடக்கு மாகாணத்தில் உள்ள ஆறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அரிசி ஆலைகளுக்கு நெல் கொள்வனவுக்கான இருபது மில்லியன் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டது என்று வடக்குக்கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்போக நெற்செய்கையின் போது, அறுவடை செய்யப்படும் நெல்லை, இம் முறை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைவாக நெல் கொள்வனவுக்கான கடன் உதவியை வழங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (க-17)

# கோப் அமர்வுகளுக்கு ஊடகங்களுக்கு அனுமதி

***ஒக்ரோபரில் இறுதித் தீர்மானம்***

கொழும்பு,செப்.28

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) நடவடிக்கைகள் எதிர்காலத்தில் ஊடகங்களுக்கு திறக்கப்படுதல் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று கோப் குழுவின் தலைவரான சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பொது நிறுவனங்கள் தொடர்பான அமர்வுகளுக்கு ஊடகங்கள் தொடர்ந்தும் அனுமதிக்கப்படாது என்று ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் கோப் குழு தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள கோப் குழுவின் கூட்டத்தில் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப் குழுவின் தலைவரான சரித ஹேரத் தனது ருவிற்றர் பக்கத்தில் இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளார். (க-இ)

# 20,000 கிலோ தேயிலையுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,செப்.28

கம்பளையில் 20 ஆயிரம் கிலோ கிராம் கழிவுத் தேயிலையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

3 ஆயிரம் கிலோ தேயிலையை மட்டுமே வைத்திருக்க அனுமதி இருந்த போதிலும், அவர் மேலதிகமாக தேயிலைக் கழிவுளை வைத்திருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். அதேவேளை வெலம்பொட பகுதியில் சுமார் 15 ஆயிரம் கிலோ கிராம் கழிவுத் தேயிலை பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை


### பகுதி- I


திருமதி எஸ்.செல்வநாயகி
ஆசிரியர்


நேரம்: 45 நிமிடம் பெயர்: ................................ . பாடசாலை: ................................................

01. உருக்களின் இயல்புகளுக்கு அமைவாக வகைப்படுத்தக் கூடியவை







1. 


2. 



3. 





02. வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




1. 
2. 
3. 




03. முதலில் தரப்பட்ட உருவுக்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க




1. 
2. 
3. 




04.



1. 
2. 
3. 

05.





i. 
ii. 
iii. 


06. யானைக் கூட்டம் ஒன்றிலுள்ள யானைகளின் செவிகளினதும் பாதங்களினதும் எண்ணிக்கை 90 எனின் கூட்டத்திலுள்ள யானைகளின் எண்ணிக்கை

1.12 2. 15 3. 9

07.




2,6 ஆகிய எண்களுக்கு எதிரே உள்ள எண்கள் முறையே

1. 1, 5 2. 5,1 3. 4,3

8. ஒரு பாத்திரத்தில் 3.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்திலுள்ள துளையினூடாக ஒவ்வொரு நிமிடமும் 70 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது எனின் பாத்திரத்திலுள்ள நீர் முழுமையாக வெளியேறுவதற்கு எடுக்கும் நேரம் நிமிடங்களில்

1. 50 2. 35 3. 70

09. சபானா காலையில் துயிலெழுந்து தனது காலைக் கடமைகளை நிறைவு செய்து கொள்வதற்கு 30 நிமிடங்களையும் காலை உணவை உட்கொள்வதற்கு 15 நிமிடங்களையும் பாடசாலைப் பேருந்தில் 1 மணி 15 நிமிடங்களையும் செலவு செய்து காலை 7.15 மணிக்கு பாடசாலையை அடைந்தாள். சபானா காலையில் பாடசாலை செல்லும்வரை செலவு செய்த நேரம் நிமிடங்களில்

1. 2 மணித்தியாலங்கள் 2. 120 நிமிடங்கள் 3. 7.15 மணி

10. கீழே தரப்பட்டுள்ள எண்களில் மூன்றை நீக்கினால் ஒரு கோலம் உருவாகும். நீக்கப்பட வேண்டிய 3 எண்களும் எவை?


86, 87, 88, 89, 90, 92, 94, 95, 96, 98


1. 87, 88, 90 2. 87,89, 95 3. 95, 96, 98


11. 20 மாணவர்கள் விழா ஒன்றில் மகிழ்ச்சியுடன் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டனர். இங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?

1. 40 2. 190 3. 28

12. குறியீடுகளை அவதானித்து விடை எழுதுக




1.  ................

2.  ................

1. திங்கள், தங்கம் 2. தங்கம் திங்கள் 3. சங்கம், தங்கள்

13. கம்பி ஒன்றின் நீளம் 72m ஆகும். அக்கம்பியானது இரு துண்டுகளாக நறுக்கப்பட்டது. ஒரு துண்டு மற்றைய துண்டிலும் இருமடங்கு நீளம் கூடியது எனின் நீளம் கூடிய, நீளம் குறைந்த கம்பித் துண்டுகளின் நீளங்கள் முறையே.

1. 32m,40m 2. 50m 12m 3. 48m, 24m

14. 1 தொடக்கம் 20 வரையான எண்களைத் தொடரொழுங்கில் எழுதும்போது ஒன்று எனும் இலக்கம் எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

1. 12 2. 10 3. 11

15. 30 தொடக்கம் 100 வரையான எண்களில் 3,5 ஆகிய இலக்கங்களினால் மீதியின்றி வகுபடக் கூடிய எண்கள் எத்தனை?

1. 7 2. 5 3. 15

16. பெட்டி ஒன்றினுள் 4 மஞ்சள் நிறமாபிள்களும் 6 பச்சை நிற மாபிள்களும் 5 நீல நிற மாபிள்களும் உள்ளன. நிச்சயமாகப் பச்சை மாபிள் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மாபிள்களை எத்தனை தடவைகள் எடுத்தல் வேண்டும்.

1. 9 2. 10 3. 11

17. 6 பிள்ளைகளுக்கும் வயது வந்தவர்கள் 4 பேருக்கும் வழங்குவதற்கு 1.5 லீற்றர் குளிர்பானம் தேவைப்பட்டது. இதற்கேற்ப 18 பிள்ளைகளுக்கும் வயது வந்தவர்கள் 22 பேருக்கும் வழங்குவதற்குத் தேவையான குளிர்பானத்தின் அளவு




1. 5 லீற்றர் 2. 6லீற்றர் 3. 4லீற்றர்

18. சங்கமம் எனும் சொல்லில் இடம்பெற்றுள்ள ஒரு சொல்லுடன் தொடர்புடைய பண்டிகை.

1. புத்தாண்டு 2. தைப்பொங்கல் 3. தீபாவளி

**மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

19. பல வடிவங்களில் உண்டு; முட்கள் உண்டு; காலத்துடன் தொடர்புடையது

1. 
2. 
3. 

20. கட்புலசாதனம்; அச்சு ஊடகம்; தினசரி வெளிவருவது

1. 

2. 

3. 

தரப்பட்டுள்ள உருவுக்குப் பொருத்தமான சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

21.



1. இயற்கை, ஊடகம், கட்புலசாதனம்
2. இலத்திரனியல், கட்புலசெவிப்புலசாதனம், நேரடித்தகவல்
3. அச்சு ஊடகம், கட்புலசாதனம், காட்சிகள்

22.



1. நூல்கள், ஆரவாரம், அறிவு
2. அமைதி, வாசிப்பு, அறிவு
3. புத்தகங்கள், பாடசாலை, வீடு

23. பின்வரும் பழமொழி உணர்த்தும் கருத்தினை தெரிவு செய்க.

ஆழமறியாமல் காலை விடாதே


1. எதையும் அளவோடு செய்ய வேண்டும்.
2. எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.
3. குளத்தின் ஆழத்தை அறிந்து காலை விடுதல் வேண்டும்.




உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழுமை ஒன்றின்

1. கால் பங்கு 2. முக்கால்பங்கு 3. அரைப்பங்கு

25. கோலத்தில் அடுத்து வரவேண்டியதை தெரிவு செய்து கோடிடுக.


 ............ , ..............

1.  2.  3. 

26. லீப் வருடம் ஒன்றில் உள்ள நாட்களின் எண்ணிக்கை

1. 360 2. 366 3. 365


27.



உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?

1. 04 2.20 3. 08

28.




1. 66 2. 90 3. 72

29. ஒரு பண்ணையிலுள்ள பசுக்களினதும் கோழிகளினதும் மொத்த எண்ணிக்கை 25 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 76 ஆகும். பண்ணையிலுள்ள பசுக்கள், கோழிகளின் கால்களின் எண்ணிக்கைகள் முறையே

1. 12, 52 2. 15,34 3.52, 24


30. 180m நீளமான சதுர வடிவக் காணிக்கு 4m இடைவெளியில் தூண்கள் நாட்ட வேண்டியுள்ளது எனின் தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?

1. 40 2. 45 3. 32


31. தரணிடம் 15cm நீளமான 25 குச்சிகள் உள்ளன. அவன் இக்குச்சிகளைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சதுரங்கள், முக்கோணிகளின் எண்ணிக்கை முறையே

1. 3,2 2. 2, 3 3. 4,3

32. உருவை அவதானித்து A,B ஆகிய இடங்களில் வரவேண்டிய எண்கள் முறையே




1. 8,4 2.2,8 3. 6,4




33. A, B, தட்டுக்களின் நிறை ஒன்றுக் கொன்று சமன். இரு தட்டுக்களிலும் உள்ள பொருட்களின் மொத்த நிறை 34kg △ ஒன்றின் நிறை 5kg எனின் ○ இன் நிறை எத்தனை kg?

1. 4kg 2. 10kg 3. 7kg

34. 1 தொடக்கம் 50 வரையான எண்களின் கூட்டுத் தொகை

1. 51 2. 1275 3. 151

35. ஒரு வரிசையில் நீலம், சிவப்பு, பச்சை, ஊதா நிறக்கொடிகள் முறையே நடப்பட்டுள்ளன. இதில் 36 ஆவது கொடியின் நிறம் 42ஆவது கொடியின் நிறம் என்பன முறையே.

1. சிவப்பு, ஊதா 2. பச்சை, நீலம் 3. ஊதா, சிவப்பு

36. P,Q ஆகிய இரு நகரங்களுக்கிடையிலான தூரம் 20km ஆகும். சமன் நகரம் P யிலிருந்து புறப்பட்டு மணிக்கு 3km வேகத்தில் நகரம் Q வை நோக்கி சுமன் நகரம் Q இலிருந்து புறப்பட்டு மணிக்கு 2KM வேகத்தில் நகரம் P யை நோக்கியும் பயணிக்கின்றனர். இவர்கள் இருவரும் தமது பயணத்தைக் காலை 7.00 மணிக்கு ஆரம்பித்தனர் எனின் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் நேரம் எத்தனை மணி

1. மு.ப. 9மணி 2. மு.ப. 11மணி 3. பி.ப. 2 மணி

37. AC, DF, GI, JL ............, ............. வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்துக்கள்

1. HI BC 2. PQ, MO 3. MO, PQ

38. பாமினியின் கடிகாரம் சரியான நேரத்திலிருந்து 25 நிமிடங்கள் பிந்திய நேரத்தைக் காட்டுகின்றது. பாமினி கடிகாரத்தை பார்த்தபோது கடிகாரம் காட்டிய நேரம் மு.ப. 8.55 எனின் சரியான நேரம் யாது?

1. 8.30 2. 9.20 3. 9.55

39. சரீன் 48 உடன் 23 ஐக் கூட்டுவதற்குப் பதிலாக 32 ஐக் கூட்டினான் எனின் அவன் பெற வேண்டிய விடை பெற்றுக் கொண்ட விடை என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம் எத்தனை?

1. 71 2. 80 3.09

40. இலங்கை 1972ஆம் ஆண்டு குடியரசாகியது. இவ் ஆண்டானது எத்தனையாம் நூற்றாண்டு , எத்தனையாவது தசாப்தம்?

1. 19,7 2. 20, 7 3. 20,8

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மன்னாரில் பொலிஸாரால் சமூக அமைதி சீர்குலைவு

## சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

தலைமன்னார், செப். 28

**பொலிஸார் பக்கச்சார்பாக நடந்துகொள்கின்றமையால், ஒரு சமூகத்தைச் சார்ந்த பெண்களும் ஆண்களுமாக பொலிஸ் நிலையம் முன்னால் குவிந்து நீதிகோரி நின்றனர். பொலிஸாரின் செயற்பாட்டால் தலைமன்னார் பியர் பகுதி அமைதி யின்றியுள்ளது என்றும், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு முறையீடு செய்துள்ளார்.**

சிரேஷ்ட பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு ஏழு மணியளவில் தலைமன்னார் பியர் பகுதியில் இரு வெவ்வேறு இனக் குழுக்களுக்கிடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் ஒரு குழுவைச் சேர்ந்த இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகி தலைமன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக நபரொருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு தரப்பினர் சமாதானத்தை ஏற்படுத்த எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள இருவரில் ஒருவரது தாயாரை பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர்.

படுகாயங்களுக்கு உள்ளாகிய இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இரண்டு நாள்களாகின்றன. எனினும், பொலிஸார் எவ்வித முறைப்பாடுகளும் பதிவு செய்யாது, பாதிப்படைந்தவர்களை வற்புறுத்தல் மூலம் வழிக்கு கொண்டு வரும் நடவடிக்கையாக ஒன்றும் அறியாத தாயைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் செயற்பாட்டைக் கண்டித்தே ஆண் பெண் இருபாலாரையும் கொண்ட ஒரு சமூக மக்கள் பொலிஸ் நிலையம் முன் நீதிகோரி நின்றுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தமது முறைப்பாட்டில் தெரிவித்தார்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட அந்தத் தாயாரை பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னிலையில் விடுவித்தனர். (த-60)

# கைதடி முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர் வாரம்

யாழ்ப்பாணம், செப். 28

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர் வார விழா எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை வரையான 7நாள்களும் நடைபெறவுள்ளது.




முதியோர் இல்ல திறந்த வெளியரங்கில் இல்ல அத்தியட்சகர் வ.செல்லம் தலைமையில் இந்த விழா நடைபெறவிருக்கிறது.

முதலாம் நாள் நிகழ்வுகள் வியாழக்கிழமை மாலை ஆரம்பமாகின்றன. இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் பொ. வாகீசன், வடமாகாண கணக்குகளும் கொடுப்பனவுகளும் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலக பிரதம கணக்காளர், பி.ஜெயராஜ், வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் செ. சிறிநிவாசன், கைதடி அரச முதியோர் இல்ல ஓய்வு நிலை அத்தியட்சகர் கே.வி.சிவனேசன், கைதடி குருசாமி வித்தியாலய அதிபர்.ந. ஜெயரூபன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆரம்ப நாளில் விருந்தினர்கள் அழைப்பு, கொடியேற்றம், தேசியக் கீதம், இல்லக்கீதம், வரவேற்பு நடனம், தலைமையுரை, விருந்தினர் உரைகளுடன் கலை நிகழ்வுகளும் ஜங்ஸ்ரார் இசைக் குழுவின் இசை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (த-39)

# நாகர்கோவிலில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 28

நாகர்கோவில் கிராமமும் நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவிலும் எனும் என்ற தலைப்பிலான நூல் வெளியீடு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இறை வணக்கத்துடன் த.குருபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஆசி உரையை கோவில் திருவிழா பிரதம குரு சிவசண்முக குருக்கள் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையை அ.அ.நடராசா நிகழ்த்தி புத்தகத்தையும் வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை கோவில் தர்மகத்தா சி.இராஜரஞ்சன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பிரதிகளை பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலரும்(காணி), வடமராட்சி கிழக்கு முன்னாள் பிரதேச செயலருமான ந.திருலிங்கநாதன், வடமராட்சி கிழக்கு பிரதி பிரதேச செயலாளர் ப.தயானந்தன், கோவில் பிரதம குரு ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன. (த-160)



### சரியும் அபாயத்தில் தொலைத்தொடர்பு கம்பம் மக்கள் அச்சம்

கொடிகாமம், செப். 28

கொடிகாமம் நகரப் பகுதியில் எந்நேரமும் முறிந்து விழக்கூடிய நிலையில் தொலைத் தொடர்பு சீமெந்து கம்பம் ஒன்று காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொடிகாமம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் இது உள்ளதால் இந்த வழியே செல்வோர் அச்சத்துடன் பயணிக்கவேண்டியுள்ளது. இதற்கு உரியவர்கள் இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் வை.ஜெகதாஸ்கோருகின்றார். (த-159)

# கோவிலில் திருடியவர் மக்களிடம் பிடிபட்டார்

முல்லைத்தீவு, செப். 28

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் சிறீ முத்துமாரி அம்மன் கோவில் உண்டியலை உடைத்து பணத்தை திருடமுற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் திருடுவதனை அவதானித்த நபரொருவர் அயலவர்களுடன் இணைந்து கொண்டு சந்தேக நபரை மடக்கிப்பிடித்தார். நட்டாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த நபரே திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி1)



# கற்களுக்குள் மறைத்துக் கடத்திய மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன

## டிப்பருடன் இருவர் கைது

கிளிநொச்சி, செப். 28

கருங்கற்களுக்குள் மறைத்து வைத்த பெருந்தொகையான மரக் குற்றிகளை கடத்த முற்பட்ட டிப்பர் வாகன சாரதி உட்பட இருவர் டிப்பர் வாகனத்துடன் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

4 ஆம் கட்டை பள்ளிக்குடா பகுதியில் வைத்து வாகனத்துடன் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

டிப்பர் வாகனத்தின் அடியில் மரக்குற்றிகளை அடுக்கி அவற்றின் மேலே கருங்கற்களைப்போட்டு மறைத்து மரக்குற்றிகளை கடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாலைமர தீராந்திகள் 31மற்றும் 23 முதிரை மரக்குற்றிகளே இவ்விதம் கடத்தப்பட்டுள்ளன. பளையைச் சேர்ந்த ஒருவரும் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த மற்றொருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேபோன்று இரு தினங்களுக்கு முன்னர் வாகனத்தில் மரக்குற்றிகளை ஏற்றி அவற்றின் மேல் தண்ணீர்ப் போத்தல்களை அடுக்கி மரக்குற்றிகள் கடத்தப்பட்ட போது கைப்பற்றப்பட்ட சம்பவமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-6)



# மட்டுவில் அ.த.க.வி... கடமையேற்ற அதி...

கொடிகாமம், செப். 28

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையின் ... நியமிக்கப்பட்ட திருமதி தர்சினி அம்பி... கடந்த திங்கட்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். மட்டுவில் வடக்கு அ.த.க பாடசா... அதிபராக கடமையாற்றிய ச.கிருஷ்ணன் ... மாதம் 12 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செ... டுத்து கரம்பகம் அ.த.க பாடசாலை அதி... இந்தப் பாடசாலைக்கு அதிபராக இடமாற்...

# பௌத்த உறவை மேம்படுத்த இந்தியா ஒன்றரைக் கோடி டொலர்!

**இலங்கை இந்தியாவுக்கு இடையிலான பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக இலங்கைக்கு ஒரு கோடியே 50 லட்சம் டொலரை இந்தியா வழங்கவுள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.**

இரு நாடுகளுக்கும் இடையிலான நெடுங்கால நாகரிக பாரம்பரியத்தையும், கலாசார மரபுரிமையையும் உறுதிப்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த உறவுகளை மேம்படுத்துவற்கு இலங்கைக்கு நன்கொடை வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார் என்று நேற்று முன்தினம் இடம்பெற்ற இருநாட்டு இணையவழி உச்சி மாநாட்டுக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் இந்து சமுத்திரப் பிராந்திய பிரிவுக்கான இணைச் செயலாளர் ஆம்த் நாராங் தெரிவித்துள்ளார்.

இந்த நன்கொடை பௌத்த மதம் சார்ந்த விவகாரங்களில் இரு நாட்டு மக்களுக்கு இடையிலான பிணைப்பை மேலும் ஆழமாக்க உதவும் என்றும் நாராங் தெரிவித்துள்ளார்.

இந்த உச்சி மாநாட்டின்போது இரு தலைவர்களும் இரு தரப்பு உறவுகளிலுள்ள முழு அளவிலான விவகாரங்கள் தொடர்பாக ஆராய்ந்ததுடன், பொதுவான அக்கறைக்குரிய பிராந்திய மற்றும் சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

பிரதமர் மோடியுடனான தனது உச்சிமாநாட்டில் இந்தியாவின் உதவியுடன் யாழ்ப்பாணக் கலாசார நிலையம் அமைக்கப்படுவது தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச விசேடமாகக் குறிப்பிட்டார். இந்தக் கலாசார நிலையக் கட்டுமானங்கள் நிறைவடையும் நிலையில் உள்ளது. அதைத் திறப்பதற்கு பிரதமர் மோடி வர வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்தார் என்றும் இணைச் செயலாளர் ஆம்த் நாராங் தெரிவித்தார்.

இலங்கைத் தரப்பால் இந்தியாவின் சில உற்பத்திகளின் இறக்குமதி மீது விதிக்கப்படும் தற்காலிகத் தடைகள் விரைவில் தளர்த்தப்படும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார் என்றும் இணைச் செயலாளர் என்று தெரிவித்தார். (எ-இ)

## போதைப்பொருள் வியாபாரிகள் 'இன்போமர்' மீது தாக்குதல்

உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்ததொடுவா பகுதியில், போதைப்பொருள் விற்பனை செய்யும் வியாபாரிகள் என்று கூறப்படும் சிலர் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்து புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மதுரங்குளி கந்ததொடுவா பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே தாக்குதலில் காயமடைந்துள்ளார் என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் அதுபற்றி அந்த நபர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என்றும் கூறி அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவரென்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிவான் பிணையில் விடுவித்தார். (த-இ)

## அத்திபாரம் போட்டதால் வெள்ளம் வடியவில்லை

*சரசாலையில் மக்கள் அவதி*

சரசாலையில் மக்கள் பயன்படுத்தும் வீதியிலிருந்து வெள்ளம் வழிந்தோடும் பகுதிக்கு பக்கத்து காணிக்காரர், அத்திபாரம் போட்டதால் அந்தப்பகுதியில் உள்ள குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை வடக்கு தெய்வங்கேணி வீதியில் பெருமளவு குடும்பங்கள் வசித்து வருகின்றன. மழைகாலத்தில் இந்தப்பகுதியில் உள்ள ஒருவரின் காணிக்கு அருகாகவுள்ள தாழ்வான பகுதி ஊடாக வெள்ளம் வயல்வெளிக்கு செல்கின்றது. வெள்ளம் வழிந்தோடக்கூடிய பகுதியை குறித்த காணிக்காரர் கடந்த வருடம் மண்போட்டு உயர்த்தியதால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கியுள்ளது. அதனால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுபற்றி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முறையிட்டோம். பிரதேச இடர் முகாமைத்துவ அமைச்சு வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் வீதியை அமைத்திருந்த மக்களின் முன்னைய முறைப்பாட்டையடுத்து பிரதேச சபைச் செயலாளர் நேரில்சென்று பார்வையிட்டு வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் மண்ணை அகற்றுமாறு குறித்த காணிக்காரருக்கு கடிதம் வழங்கியிருந்தார். எனினும், அதை காணிக்காரர் கவனத்தில்கொள்ளவில்லை.

இந்தநிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை வெள்ளம் வழிந்தோடக்கூடிய பகுதியை சிமெந்தால் அத்திவாரம் அமைத்துள்ளார் என்றும் மக்கள் தெரிவித்தனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (த-9)

## 20க்கு எதிராக மு.காவும் நீதிமன்றை நாட முடிவு!

கொழும்பு, செப்.28

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று நீதிமன்றம் செல்லவுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி, மடவளையில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள நல்ல அம்சங்களைப் பாதுகாத்து, அதன் குறைபாடுகளை நீக்குவது தவறில்லை. 19ஆவது திருத்தத்தை முற்றாக நீக்கிப் புதிய விடயங்கள் சேர்க்கப்படுவது 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் இருந்த மிதமிஞ்சிய அதிகாரங்களை உருவாக்கலாம்.

அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

இந்தத் திருத்தம் அதிகாரப் பரவலாக்கம் போன்ற விடயங்களைப் பாதிப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டும் இருந்தால் மட்டும் போதாது, பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பும் தேவை என்ற நிலை ஏற்படும். இது தொடர்பாக நாம் நீதிமன்றை நாட உள்ளோம். - என்றார். (எ-இ)

## எதிர்க்கட்சியின் 20 பேர் 20க்கு ஆதரவளிப்பார்கள்!

*கூறுகின்றார் அமைச்சர் சந்திரசேன*

கொழும்பு, செப். 28



அரசமைப்புக்கான 20 ஆவது திருத்த வரைபை நிறைவேற்றும்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த 20 பேரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்கனவே எடுத்துள்ளது என்று அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேன நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைக் கூறியுள்ளார்.

அரசமைப்புக்கான 20ஆவது திருத்த வரைவை நிறைவேற்றும் போது அரசுடன் இணையும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 25 ஆகவும் இருக்கலாம்.

எவர்தான் காலைப் பிடித்து இழுத்தாலும், எவர்தான் தடைகளை ஏற்படுத்தினாலும் அரசு, தான் முன் வைத்த காலை பின்நோக்கி வைக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார். (த-இ)

## வவு. சமூக விதை வங்கிக்கு சென்ற அமைச்சர் தினேஸ்

வவுனியா, செப்.28

வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்று வவுனியா செட்டிக்குளத்தில் உள்ள சமூக விதை வங்கிக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அந்த வங்கியால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஆராய்ந்தார். "நாட்டின் பசுமை" செயற்றிட்டத்தின் ஊடாக பங்களிப்புச் செய்த பயனாளிகளுக்கு சமூக விதை வங்கியின் ஏற்பாட்டில் சான்றிதழ், பணப்பரிசு வழங்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்டார்.

பயனாளிகளின் வீடுகளில் பயன்தரு மரங்கள் நடும் நிகழ்வும் நடைபெற்றது. பயனாளிகளுக்கு நல்லின விதைகளும் வழங்கப்பட்டன.

(எ-110)

*3 வருடங்களில் இலங்கை*

## பாலில் தன்னிறைவு பெறும் அதன்பின் பால்மா இறக்குமதி இராது

*அமைச்சர் அளுத்கமகே தெரிவிப்பு*

பாலில் தன்னிறைவு பெற்ற நாடாக எதிர்வரும் 3 வருடங்களில் இலங்கை மாற்றப்படும் என்று தெரிவித்தார் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வெளிநாடுகளிலிருந்து பால்மா இறக்குமதியை முற்றாகத் தடைசெய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் 2 லட்சத்து 50 ஆயிரம் பசுக்கள் உள்ளன. அவற்றின் மூலமாக 35 சதவீத பால் உற்பத்தியே இடம்பெறுகின்றது. ஏனைய அனைத்தும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

## 22 பேர் குணமடைவு

கொழும்பு, செப்.28

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 22 பேர் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 208 ஆக அதிகரித்துள்ளது. தொற்று உறுதியானவர்களில் 128 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(எ-இ)

## நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 . 06 . 1944

மறைவு
10 . 10 . 2019

### அமரர் தம்பையா சற்குணம்

திதி: துவாதசி

அன்பு எனும் மூன்று எழுத்துக்கு
ஆயிரம் அர்த்தம் சொல்லி
இன்பத்தையும் துன்பத்தையும் புரிய வைத்து
ஈன்றோர் சான்றோர் போற்ற
உழைப்பே ஊதியம் என கருதி
ஊக்கத்தோடு செயல்பட்டு
எட்டுப்படி நாங்கள் ஏற
ஏணியாக நீங்கள் இருந்தீர்கள் - இன்று
ஐயம் கொண்டோம் இவ்வுலகில்
ஒளி இன்று இருளாகிவிட்டது
ஓராண்டு ஆகியும் ஆறவில்லை - நம் துயரம்
ஔடதமாக தேற்றிட வருவீர்களா?

3 ஆம் ஒழுங்கை,
A.V. றோட், அரியாலை.

சிறகொடிந்த பறவைகளாய் தவிக்கும்
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### சரவணமுத்து தங்கம்மா
(சகுந்தலாதேவி)

தோற்றம்
09 . 08 . 1942

மறைவு
10 . 10 . 2019

உங்கள் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி வெதும்பி அழுகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
- ஒளிர்ந்தவளே
நீர் அணைந்து ஓராண்டு
- ஓடி மறைந்தாலும்
உங்கள் ஒளி முகத்தை முன்னிருத்தி
என்றும் உங்கள் நினைவுடனே
- வாழுகின்றோம்
நினைவில் எம்முடனும் நிஜத்தில்
இறைவனிடமும் கலந்திட்ட
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளை
நெஞ்சில் சுமக்கும்.....

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 29.08.2020 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் ஆறுமுகம் தில்லைநாதன்

இளைப்பாறிய அதிபர் - கணபதி வித்தியாலயம், கொழும்பு )
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 26.09.2020 சனிக் கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (28.09.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் சுடராய் பிரகாசித்து (29.08.2020) அன்று கண்ணிமைக்கும் கணப்பொழுதில் காலனின் வழி விரைந்து எம்மையெல்லாம் விழி நீரில் ஆழ்த்திச் சென்ற எமது பாசமிகு தெய்வமும் எமது குடும்பத் தலைவருமாகிய அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் அவர்கள் நோய்வய்ப்பட்டிருந்த வேளை யாழ். போதனா வைத்தியசாலை 8ஆம் வாட்டில் பணிபுரிந்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்,சாவகச்சேரி எவகிரின் வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர், பணி யாளர்கள் அனைவருக்கும், மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவிகள் அனைத்தும் புரிந்த அயலவர்களுக்கும், அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசியிலும், நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் மாலை, மலர்வளையம், முகநூல், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்தூவி மலர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்ட அனைத்து அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றிதனை நவின்று இந்த நினைவு மடலை சமர்ப்பிக்கின்றோம்.

சோதியம்மா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்,

# அங்கொட லொக்காவின் தாயிடம் விசாரணை

கொழும்பு, செப்.28

இந்தியாவில் உயிரிழந்ததாகக் கூறப்படும் பாதாள உலகக் குழுத் தலைவர் அங்கொட லொக்காவின் தாய் மற்றும் சகோதரி ஆகியோர் மேல் மாகாண தெற்கு குற்றவியல் பிரிவுக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது, அங்கொட லொக்கா ஹெரோயின் வர்த்தகம், கப்பம் மூலம் ஈட்டியதாகத் தெரிவிக்கப்படும் 11 காணிகள் பற்றியும் சகோதரியின் பெயரில் உள்ள மூன்று காணிகள் தொடர்பிலும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. மேலும், அங்கொட லொக்காவின் காதலி என அறியப்படும் வெளிநாட்டில் வசித்து வரும் பெண்ணின் பெயரில் உள்ள சொத்துக்கள் தொடர்பிலும் அவர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளன. (வ-இ)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 . 09 . 1970

மறைவு 28 . 09 . 2014

**அமரர் பாமதி அமிர்தகுமார்**
(ஆசிரியை, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

அன்பின் திருவுருவே
எங்கள் பாசத்தின் உறைவிடமே
எத்தனை காலங்கள் போனாலும்
மறப்போமா உங்களை
எங்கள் மனதில் குடிகொண்ட தெய்வமே
உங்கள் அன்பு உருவம் என்றும் மாறாது
எம் இதயத்தில் உங்கள் நினைவுகளை
சுமந்து வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
சாந்தி! சாந்தி ! சாந்தி!

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 08 . 1936

மறைவு 10 . 10 . 2019

**அமரர் சரவணமுத்து குமாரசாமி**
(ஓய்வுநிலை பிரதி அதிபர்-
யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்)

உங்கள் ஆசைமுகம் பார்த்திங்கு ஆண்டொன்று ஆனதுவே
பாசமாய் எமை அழைத்து பன்னிரண்டு மாதம் ஆனதுவே
ஆண்டொன்று ஆனாலும் அழியாது எம் சோகம்
பாசத்தின் உறைவிடமாய் அன்பிற்கு இலக்கணமாய்
பண்பிலே ஆசானாய்.
நேசமாய் எம் நெஞ்சில் நிறைந்திட்ட எம் ஆசை அப்பாவே!
காலன் உமைக்கவர்ந்து அகவை ஒன்று ஆனாலும்
மரணம் தனைக்கடந்து எம் மனதில் வாழ்கிறீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

குடும்பத்தினர்.
வாதரவத்தை, புத்தூர்.

## மரண அறிவித்தல்
## கனகசுந்தரம் பாலசிங்கம்



யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் பாலசிங்கம் 25.09.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இந்திரா தேவி அவர்களின் அன்புக் கணவரும், கவிதா, ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசதுரை, சரஸ்வதி, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மனோமோகன், தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமனும், அனிகா, அரிஸ், விஷ்ணுயாதவ், இஷானி லக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கணேசமூர்த்தி
077 154 6842
அல்வாய் வடக்கு, அல்வாய்.

தோற்றம் 22.04.1947
மறைவு 25.09.2020

## மரண அறிவித்தல்



பிறப்பு 02.02.1946
இறப்பு 27.09.2020

## முருகேசு கந்தசாமி

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும் வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி நேற்று (27.09.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முருகேசு அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு பேரம்பலத்தின் அன்பு சகோதரனும், தவமணியின் அன்பு மைத்துனரும், ஆறுமுகம் கண்மணியின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சிவபாலன் (சுவிஸ்), சிவராமன் (பிரான்ஸ்), சிவகுமாரன் ( RDS தலைவர், இரத்தினபுரம், கிளிநொச்சி) சிவமலர் (பிரான்ஸ்), சிவாஜினி (சாந்தி- சாமி மல்ரி சொப் ஆலடி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவானி (சுவிஸ்), சோபனா (பிரான்ஸ்), நந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), குகனேஸ்வரன் (பிரான்ஸ்), ரூபாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை, கண்டாவளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுஷா, தர்ஷனா (சுவிஸ்), ஸ்ரவன் ஷயான், ஷார்வின் (பிரான்ஸ்), அருணன், இலக்ஷிகா (கிளிநொச்சி ம.வி), கிசோபா (கிளிநொச்சி), கோபிகா, டனுசன் (பிரான்ஸ்), நிலானி, அபர்னா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2020) மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே: 077 225 1314

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 . 04 . 1975

மறைவு 30 . 08 . 2020

கடந்த (30.08.2020) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் கஷமுகன் கந்தஜோதி**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து ஓடோடி வந்து ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், ஆறுதல் தேற்றுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும், உள்ளநாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்களுக்கும், இறுதி நிகழ்விலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (29.09.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இராஜ வீதி,
இராமபுரி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்
076 366 7710, 077 457 4608

# உரப்பையில் கட்டப்பட்டு கிணற்றுக்குள் வெடிபொருள்



கிளிநொச்சி, செப்.28

கிணறு ஒன்றில் உரப் பையில் கட்டப்பட்ட நிலையில் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீட்பதற்கு பொலிஸாரால், நீதிமன்றில் அனுமதி கோரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட புளியம்பொக்கணை, பாற்பண்ணைக்குப் பின்புறமாக உள்ள வெற்றுக்காணியில் உள்ள கிணறு ஒன்றிலேயே இந்த வெடிபொருள்கள் காணப்பட்டுள்ளன.

கிணற்றைத் துப்புரவு செய்தபோது சிவப்பு நிற உரப்பையில் சுற்றிக் கட்டப்பட்ட நிலையில் அவை காணப்பட்டுள்ளன. அது தொடர்பில் தருமபுரம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, அவற்றை மீட்பதற்கு கிளிநொச்சி நீதிவான் மன்ற அனுமதியைக் கோரியுள்ளனர். குறித்த வெடி பொருள்கள் போர்க் காலத்தின் போது கிணற்றுக்குள் போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ப-6)

# வீதியை மூடியதால் மக்கள் கவனவீர்ப்பு



சண்டிலிப்பாய் ஜே143 கிராம அலுவர் பிரிவிலுள்ள வீதியொன்றைத் தனியொரு குடும்பம் மூடி, போக்குவரத்துக்குத் தடை போட்டதால், அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள், நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்ததாவது; இந்த வீதியை நாங்கள் காலம் காலமாகப் பயன்படுத்தி வருகின்றோம். ஆனால் இங்கு இருக்கும் ஒரு குடும்பம் வீதியை மூடி போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு தடை போட்டுள்ளது. இதனால் வெளியில் சென்ற எவரும் வீடுகளுக்குள் செல்ல முடியாத நிலையில் உள்ளோம். அது போல உள்ளே இருப்பவர்கள் வெளியில் வர முடியவில்லை. இது தொடர்பான வழக்கு நீதிமன்றம் சென்று நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வீதிப் பிரச்சினை தொடர்பில் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அவர்கள் அசமந்தமாகவே உள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து எமக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றனர்.

சம்பவ இடத்துக்கு வந்த மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளரும் மானிப்பாய் பொலிஸாரும் மக்களுடன் பேசி, பிரச்சினையைத் தற்காலிகமாகத் தீர்த்து அவர்களை வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.


## ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆனந்தம் ஜெயக்குமாரன் கோமஸ்**
பி.ஜெ பர்னான்டோ உரிமையாளர்

மண்ணில் 19.01.1958 — விண்ணில் 28.09.2019

கண்ணை இமைகாப்பது போல் எமை காத்து
வளர்த்தீர்களே அப்பா
கள்ளம் கபடமில்லா வெள்ளை மனமும்
கொள்ளைச் சிரிப்பழகும்
பெரியோர் சிறியோர் பேதமின்றி பழகும்
பாங்கும் காலனையும் கவர்ந்ததோ
மனிதரில் மாணிக்கமாய் விளங்கிய
உங்களை இனி எப்பிறப்பில் காண்போம் அப்பா

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

**மனைவி,மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
(பி.ஜெ பர்னான்டோ ஸ்தாபனத்தார்)
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 . 03 . 1954



மறைவு 26 . 09 . 2020

**மாணிக்கம் சண்முகநாதன் (பவா)**
**(சமாதான நீதவான் - J.P)**
**(இயக்குனர்-புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்)**

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரம் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய - எங்கள்
கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்!

அத்தானின் பிரிவால் தவிக்கும் எங்கள் சகோதரிக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**திரு.திருமதி செல்வரஞ்சன் (மைத்துனன்)
கமலாம்பிகை (சகோதரி)
(பிரான்ஸ்)**

## உயர்தரம் பௌதீகவியல் வகுப்புகள்

Group and Personal Classes,
Paper Class.
S.Gunavarshan Bsc.
**077 538 8670**

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 . 10 . 1950



விண்ணில் 11 . 07 . 2014

**அமரர் செல்லத்துரை கணநாதன்**
*திதி: புரட்டாதி மாத பூர்வபக்க துவாதசி*

உமைப் பார்க்கும் நேரத்தில் எம்மைப் பிரிந்து
தொடமுடியாத தூரத்தில் எம்மை இங்கு
தவிக்கவிட்டு எங்கே சென்றீர்கள்?
உங்களின் மரணம் தான் பொய்யாகிப்
போகாதா - நாம் வணங்கும்
தெய்வமாக நித்தம் உங்கள் படத்தடியில்
தொழுகின்றோம்.

"தர்மகிரி" அம்மன் கோயிலடி,
அராலி கிழக்கு, அராலி.

நீங்கா நினைவுடன்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**ஞானப்பிரகாசம் மேரி ஜோசப்தாசன்** (பாய்)



தோற்றம் 09.05.1951 — மறைவு 26.09.2020

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் மேரி ஜோசப் தாசன் (பாய்) நேற்று முன்தினம் (26.09.2020) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் திரேசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை மற்றும் மேரி ஜெயசிங்கியின் அன்பு மருமகனும், நீற்றா ஜெயசீலியின் அன்புக் கணவரும், றோஜர் றூவீனஸ் (பொறியியலாளர்), றோஜிதா (விஞ்ஞான பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யூஜின் மற்றும் அருள், ஜெயம், நேசத்துரை, புஸ்பம், ராணி, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பீற்றர் ஜெயசீலன், ஜோசப் ஜெயதாஸ், கிறிஸ்ரீனா ஜெயந்தினி (சுவிஸ்) ஜோன் ஜெயலதா (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (28.09.2020) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

**077 977 8413**

### ராஜபக்ச அரசின்....

வர்த்தக நிலையங்கள், சிகை அலங்காரிப்பு நிலையங்கள், உணவகங்கள், மருந்தகங்கள் என்பன மூடப்படும். போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாது. கல்விச்செயற்பாடுகளும் நடைபெறாது. அத்துடன் வங்கிகள், நிதி நிறுவனங்கள் என்பனவும் மூடப்படும் என்று கூறப்படுகின்றது. அத்தியாவசிய அவசர சேவைகள் மாத்திரமே இடம்பெறும்.

ராஜபக்ச அரசு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்கு பல்வேறு நெருக்கடிக்களைப் பிரயோகித்தது. நீதிமன்றங்கள் ஊடாகப் பொலிஸார் தடை உத்தரவுகளைப் பெற்றிருந்தனர். இதனால் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் மற்றும் ஹர்த்தாலை அனுஷ்டிக்க தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் திரண்டு முடிவெடுத்திருந்தன.

இதற்கு அமைவாக இன்றைய தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை இன்றைய தினம் வீதிகளில் ரயர்களை எரித்தல், அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாது, வீடுகளில் முடங்கியிருந்து போராட்டத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ.5)

### அரச...

தால் போராட்டம் அனுஷ்டிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்புக்கிணங்க அனுஷ்டிக்கப்படவுள்ள இன்றைய ஹர்த்தால் போராட்டத்துக்கு அனைத்துத் தமிழ் மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது மிகவும் அவசியமாகும். இது அவர்களின் பிரதான கடமையாகும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இன்றைய ஹர்த்தால் போராட்டம் தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடைய சுதந்திரமான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பல முயற்சிகளை ராஜபக்ச அரசு மேற்கொண்டு வருகின்றது. அரசின் இந்தச் செயல் ஜனநாயக ரீதியில் ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம் இல்லை. இது தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை அவமதிக்கின்ற செயற்பாடாகும்.

தமிழ் மக்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழர்களை அவமதிக்கும் ராஜபக்ச அரசின் செயற்பாட்டுக்கு எதிராகவும், தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தியும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் இணைந்து வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்த அழைப்பையேற்று அந்தக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் போராட்டத்துக்குத் தமிழ் மக்கள் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும். இது அவர்களது பிரதான கடமையாகும் என்று நான் கருதுகின்றேன், என்றார். (ஒ.5,22)

### ராஜபக்சக்களின் ....

ஆதரவாளர்களுக்கு மக்கள் இடமளிக்கக் கூடாது என்று இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஒன்றிணைந்த தமிழ் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் இன்றைய தினம் பூரண ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:

அரசு தரப்பிலோ அல்லது பாதுகாப்பு தரப்பிலோ அல்லது அரசின் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்களிடத்தில் இருந்தும் இந்த ஒற்றுமையை இந்த அரசியல் உரிமையை ஜனநாயக கடமைகளை நிறைவேற்ற ஒன்றுபட்ட நிற்கின்ற இந்த நிகழ்ச்சியை சீர்குலைப்பதற்கு நாம் இடமளிக்கக்கூடாது. மக்கள் அதனை செய்பவர்களிற்கு இடமளிக்கக் கூடாது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டில் உள்ள பத்து கட்சிகள் சார்பில், தொழில் துறையைச் சார்ந்தவர்கள், போக்குவரத்து துறையை சேர்ந்தவர்கள், தனியார் துறையை சேர்ந்தவர்கள் பூரணமான அர்ப்பணிப்போடு இந்த பொது வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.

எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாது அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஒன்றிணைந்த தமிழ் கட்சிகள் நடத்தி முடித்திருக்கின்றோம். அது அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்ததனால் ஏற்பட்ட ஒற்றுமையின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயம். இது பற்றி மக்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இந்த நாட்டில் கலவரங்களால், போர்க்காலங்களில் உயிர்களை பலி கொடுத்த அல்லது கொல்லப்பட்ட ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற ஜனநாயக உரிமையை அவர்களுடைய மனிதாபிமான கடமைகளை எதிர்த்து, அரசு பொலிஸார் ஊடாக நீதிமன்றங்களில் தடைகளைப் பெறுகின்றார்கள்.

மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விடயம். அந்த உரிமை இந்த நாட்டிலே மறுக்கப்பட்டு இருக்கின்றது. இந்த மறுக்கப்பட்ட உரிமையினை நாம் ஜனநாயகரீதியில் அரசுக்கு எதிர்ப்பை காட்டும் முகமாக இன்று இடம்பெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன், என்றார். (ஒ.5,111)

### முஸ்லிம்களும் ....

முஸ்லிம்களும் முற்போக்குச் சிங்கள மக்களும் ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தியாகி திலீபனை அஞ்சலிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தடைகளைகளுக்கு மத்தியில் சாவகச்சேரி சிவன் கோவிலில் நேற்றுமுன்தினம் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளோம். உயிரிழந்தவர் எவராக இருப்பினும் அவர்களை அஞ்சலிக்க உரிமை உண்டு. அதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவின் அடிப்படையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக வடக்கு கிழக்கு ரீதியில் முழு அடைப்புப்போராட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு அனைவரையும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். தமிழ் மக்கள் மட்டுமல்ல முஸ்லிம்களும் முற்போக்கு சிங்களவர்களும் இந்த முழு அடைப்புக்கு ஆதரவு தரவேண்டும், என்றார். (ஓ.ம,26)

### பிக்குகள்....

சிறப்பு வழிபாடுகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த பிக்குகள் மற்றும் தென்பகுதி மக்களை ஏற்றிச் சென்ற சிறப்பு ரயில் மீது நேற்று இரவு சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒருவர் தலையில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சிறப்பு வழிபடுகளை மேற்கொள்ளவென தெற்கிலிருந்து, பௌத்த மதகுருமார் மற்றும் பௌத்த மக்கள் சிறப்பு ரயில் சேவை மூலம் வந்திருந்தனர். அவர்கள் நேற்று இரவு யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குக்கு புறப்பட்டபோதே கல்வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலில் குலதிலக (வயது - 71) என்ற வயோதிபர் தலையில் காயமடைந்துள்ளார். அவருக்கு 5 தையல்கள் போடப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தின் போது அங்கு சிறு பதற்றம் ஏற்பட்டது. பின்னர் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் அந்தச் சிறப்பு ரயில் தெற்கு நோக்கிப் புறப்பட்டது. (ப-6)

### ஹர்த்தாலை....

ஒரு சிலர் இணைந்து நேற்றுப் போராட்டம் முன்னெடுத்தனர். கடந்த சில தினங்களாக போராட்டங்களுக்கு கொரோனாவைக் காரணம்காட்டி நீதிமன்றங்களில் தடைகளைப் பெற்ற பொலிஸார் இந்தப் போராட்டத்துக்கு எந்தவொரு தடையுத்தரவையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதுடன், போராட்டக்காரர்களிமிருந்து மனுவையும்பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை இந்தப் போராட்டத்தை அரச ஒட்டுக்குழுவினரும், பாதுகாப்புத் தரப்பின் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து ஒழுங்கமைத்ததாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ராஜபக்ச அரசின் கொடூர அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள தமிழ் மக்கள் இன்றைய தினம் தமது எதிர்ப்பை ஜனநாயக வழியில், ஹர்த்தாலாக கடைப்பிடிக்கவுள்ளனர்.

இந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக நீதிக்கான இளைஞரணியில் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு சிலரால் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர் கடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக, அங்கஜன் இராமநாதன் தலைமையில் போட்டியிட்டிருந்தார்.

போராட்டத்தின் முடிவில் மனுவை, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலகம் வரை சென்று பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கையளித்தனர். (ஒ.5,20)

### அளவுக்கேற்ற....

தேங்காய் விலை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பின்படி, தேங்காய்கள் விற்கப்படுகின்றதா என்பதை ஆராய விசேட கருவிகளுடன் நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

வர்த்தமானி அறிவிப்பில், தேங்காய்களின் அளவின் பிரகாரம் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த அளவின் பிரகாரம் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை சரி பார்க்க விசேட கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. நுகர்வோர் விவகார அதிகாரசபை தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டி.எம்.எஸ். சேனநாயக்க இதனை தெரிவித்தார்.

13 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்ட சுற்றளவு கொண்ட தேங்காயின் அதிகபட்ச விலை 70 ரூபாவாகவும், 12 முதல் 13 அங்குலத்துக்கு இடையிலான சுற்றளவு தேங்காயின் அதிகபட்ச விலை 65 ரூபாவாகவும், 12 அங்குலத்தை விட குறைந்த சுற்றளவுடைய தேங்காய் 60 ரூபாவுக்கும் விற்கலாம் என்று வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டள்ளது. (ஓ.இ)

### 13 தொடர்பில்...

சிங்கள தேசியவாத அமைப்புகளின் ஒன்றியமான ' தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்' வலியுறுத்தியுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்குமிடையிலான காணொலிமூல கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலை மோடி விடுத்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்ட வலியுறுத்தலை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த நெருக்கடியான சூழ்நிலையில்தான் இந்தியாவால் இலங்கை இந்திய ஒப்பந்தம்ஊடாக13ஆவதுதிருத்தச்சட்டம் திணிக்கப்பட்டது. தற்போது இலங்கையில் அமைதி நிலவுகின்றது. பயங்கரவாத அமைப்பும் இல்லை. எனவே, 13 குறித்த தனது நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதுடன் 13 குறித்து எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

எனினும், எமது நாட்டு பிரதமருடனான சந்திப்பில் 13 ஐ நடைமுறைப்படுத்துமாறு மோடி வலியுறுத்தினார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த அழுத்தத்தை இலங்கை அரசு ஏற்கக்கூடாது. மோடியுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்ன, 13 தொடர்பில் கூறப்பட்ட விடயம் என்னவென்பதை அரசு நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

அதேவேளை புதிய அரசமைப்பின் ஊடாக 13 ஐ நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கிடையில் அவசரப்பட்டு மாகாணசபைத் தேர்தலை நடத்திவிடக்கூடாது, என்றார். (ஒ.5,44)

### இன்றைய முழு....

வதைக் கண்டித்தும், அஞ்சலிப்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமை என்பதை வலியுறுத்தியும் இன்று நடைபெறவிருக்கும் முழு அடைப்புக்கு அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கோரியுள்ளார்.

(விரிவு-பக்; 3)

மணிவண்ணன்......

தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் கட்சியின் அடிப்படை உறுப்பினரில் இருந்தும் மத்தியகுழுவில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை கட்சியிலிருந்து மணிவண்ணனை நீக்கியமை தொடர்பில் முன்னணியால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது அரசியல் இயக்கத்தின் மத்திய குழுவின் கடந்த ஓகஸ்ட் 13ஆம் திகதிய தீர்மானத்துக்கமைவாக, உடனடியாக செயற்படும் வண்ணம் தாங்கள் தேசிய அமைப்பாளர் மற்றும் பேச்சாளர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் மறுநாள் எமது கடிதத்தின் மூலம் தங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எமது அரசியல் இயக்கத்தின் கட்டுக்கோப்பைப் பேணும் முகமாக தங்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி தலைவருடன் நடந்த சந்திப்பின்போது 'தவறை ஏற்றுக்கொண்டு தாங்களாகவே கோரியிருந்தீர்கள். ஆயினும், அந்தத் தவறைத் திருத்திக்கொள்ள பல மாதகால அவகாசம் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் கூட, மத்திய குழுவின் முடிவுகளை மீறிய வகையில்' எமது அரசியல் இயக்கத்தை சிதைக்கும் போக்கிலேயே தங்களின் தொடர் செயற்பாடுகள் அனைத்தும் அமைந்துள்ளன.

**கட்டுபாடில்லாத செயற்பாடு**

அரசியல் இயக்கத்தின் பதவிநிலை அணுகுமுறைகள் தொடர்பாக, தாங்கள் தெளிவாக அறிந்திருந்த நிலையிலும், மத்திய குழுவின் அனுமதியுடன் தலைமைத்துவமே தகுதிவாய்ந்தவர்களுக்கு பொறுப்புக்களை வழங்கும் நடைமுறைகளே எமது அரசியல் இயக்கத்தின் மரபாக உள்ள நிலையிலும், தங்களுக்கு இதே தலைமைத்துவத்தால் வழங்கப்பட்ட தேசிய அமைப்பாளர் மற்றும் பேச்சாளர் பதவிகளிலிருந்து நீக்குவதென, எமது இயக்கத்தின் மத்திய குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலான நடவடிக்கையையே மேற்கொண்டிருந்தோம். கட்சியின் உறுப்பினராக இருந்து அதற்கு மேன்முறையீடு செய்து, தங்களின் தகுதிநிலையினை நிரூபிப்பதற்கான சந்தர்ப்பம் எமது அரசியல் இயக்கத்தினூடாக வழங்கப்பட்டிருந்த நிலையிலும், இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை ஒழுக்க நெறிமுறைகளுக்கு கட்டுப்படாத முறையில் 'மத்திய குழுவின் தீர்மானங்கள் சட்டவலுவற்றதும், சனநாயகத்துக்கு முரணானதும், செல்லுபடியற்றதும், ஏற்றுக்கொள்ள முடியாததும் எனத் தாங்கள் குறிப்பிட்டுள்ளதுடன்' மத்திய குழுவின் தீர்மானத்தை தான்தோன்றித்தனமாக மீறியும், இயக்கத்தின் ஒழுக்க விதிகளுக்கு கட்டுப்படாமலும், எமது அரசியல் இயக்கத்தின் நற்பெயரைச் சிதைக்கத் திட்டமிட்ட வகையிலேயே செயற்பட்டு வருகின்றீர்கள்.

எமது அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிப்பதற்கு நாம் வழங்கிய சந்தர்ப்பங்கள் அனைத்திலும் எவ்வித நல்லிணக்கத்தையும் தாங்கள் காட்டியிருக்கவில்லை. மாறாக தேசிய அமைப்பாளராகவும், ஊடகப் பேச்சாளராகவும் தொடர்ந்தும் செயற்படுவேன் எனவும், மத்தியகுழு தீர்மானம் தங்களைக் கட்டுப்படுத்தாது எனவும், எமது அரசியல் இயக்கத்தின் கட்டமைப்பையும், ஒழுக்க நெறிமுறைகளையும் சவாலுக்கு உட்படுத்தி, சிதைக்கும் வகையிலேயே தங்கள் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

**சந்தர்ப்பம் வழங்கினோம்**

இதனடிப்படையில் ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற எமது அரசியல் இயக்கத்தின் மத்தியகுழுத் தீர்மானத்தின் அடிப்படையில் தாங்கள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்புரிமையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளீர்கள் என்பதைத் தெரிவித்து, மத்திய குழுவின் தீர்மானத்துக்கமைவாக தங்களுக்கு குற்றப்பத்திரமும் வழங்கப்பட்டிருந்தது. அக்குற்றப்பத்திரத்தில் ஆறு ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து, ஒழுக்க மற்றும் செயற்பாட்டுக் கோவையின் விதிகளை தாங்கள் மீறியுள்ளமையையும் குறிப்பிட்டு, தங்கள் பக்க நியாயமேதுமிருப்பின் 14 நாள்களுக்குள் எழுத்துமூலம் காரண விளக்கத்தினைத் தெரிவிக்குமாறும் எம்மால் கேட்கப்பட்டிருந்தது. தாங்கள் குற்றங்கள் புரிந்தமை சந்தேகத்துக்கிடமின்றி மத்தியகுழுவினால் அறியப்பட்டிருந்தும், தங்கள் பக்க காரண விளக்கமேதும் இருப்பின் அவற்றைப் பரிசீலிப்பதற்காகவும், தங்களுக்கு மன்னிப்பளிக்கக்கூடிய ஏதாவது அடிப்படைகள், தங்களின் காரண விளக்கத்தில் உள்ளதா என்பதனை ஆராய்வதற்கும், காரண விளக்கத்தில் மத்தியகுழுவால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படைகள் ஏதேனும் இருப்பின், விசாரணைக்கு முவை அமைத்து பரிசீலிப்பதற்குமாக தங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

**ஒத்துழைக்கத் தயாரில்லை**

ஆயினும், ஓகஸ்ட் 20ஆம் திகதி என முற்திகதியிட்டு தங்களின் பதில் கடிதத்தை அனுப்பியுள்ளதுடன், அக்கடிதத்தில் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், ஒழுக்க விதிகள் மீறப்பட்டமை தொடர்பாகவும், தங்களின் காரண விளக்கங்கள் எவற்றையும் குறிப்பிட்டிருக்கவில்லை. மாறாக, எமது அரசியல் இயக்கத்தின் மத்தியகுழுவின் தீர்மானங்களை வேண்டுமென்றே மீறும் வகையில், தாங்கள் தங்களின் அக்கடிதத்தில் 'தேசிய அமைப்பாளர், ஊடகப் பேச்சாளர்' என்ற அதே பதவிநிலைச் சொற்பதங்களைக் குறிப்பிட்டுள்ளமையானது, எமது அரசியல் இயக்கத்தின் கட்டுப்கோப்புக்களை அனுசரித்து பயணிக்கத் தாங்கள் தயாரில்லை என்பதை மிக தெளிவாக வெளிப்படுத்துகிறது.

எங்கள் அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிப்பதற்குரிய எந்தவித நல்லிணக்கத்தையும் ஒழுக்கத்தையும், கட்டுக்கோப்பையும், கூட்டு பொறுப்பையும் தாங்கள் கடைப்பிடிக்க தயாரற்ற நிலையில், தங்களை இனிமேலும் எமது அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிப்பதற்குரிய அனைத்து வாய்ப்புக்களையும் தாங்கள் இழந்துள்ளதாக மத்திய குழு நேற்று ஏகமனதாக தீர்மானித்துள்ளது. எமது அரசியல் இயக்கத்தின் மத்தியகுழுவின் தீர்மானங்களை தொடர்ச்சியாக மீறி வரும் வி.மணிவண்ணன் ஆகிய தாங்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படுகிறீர்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5.26)


## மரண அறிவித்தல்

தோற்றம்: 28 - 05 - 1945



மறைவு: 27 - 09 - 2020

### திருமதி தர்மலிங்கம் செல்வநாயகி (தேவி)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் செல்வநாயகி நேற்று (27.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பையா தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இரத்தினம், தேவராஜா, நேசமலர் மற்றும் சகுந்தலாதேவி (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மசீலன் (பிரான்ஸ்), செல்வவினிதா (கால்நடை வைத்தியர்), குமுதா (ஆசிரியர், பிலி / தெஹிவளை தமிழ் வித்தியாலயம்), குணசீலன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றோகினி (பிரான்ஸ்), வினோசுந்தர் (பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை-அநுராதபுரம்), முரளிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கொழும்பு), மீரா (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கரிசன், கீரன், பிரவீன், அபீசன், அனந்தரேஸ், அதீசனன், அக்ஷயா, கார்த்திகேயன், லவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தம்பையா தர்மலிங்கம்-கணவர்
(லிப்ரன்)
பிள்ளைகள்.

இணுவில் தெற்கு.



## மரண அறிவித்தல்

பிறப்பு: 05 - 02 - 1938



இறப்பு: 27 - 09 - 2020

### சிவகுருநாதர் இராமச்சந்திரா

(ஓய்வுநிலை Ceylon Tobacoo Company உத்தியோகத்தரும், உதயன் பத்திரிகை நிறுவன ஊழியரும், சமாதான நீதவான்)

விளாத்தித்தோட்டம் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதர் இராமச்சந்திரா நேற்று (27.09.2020) ஞாயிற்றுக்கிழமை மாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் வள்ளியம்மை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுதாகரன், சுலோசனா (அதிபர்-மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), திருமதி சிவலிங்கம் சுகிர்தாராணி (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), சுமதி (சங்கானை ப.நோ.கூ.சங்கம்), தயாகரன் (யா/மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கந்தையா, அருட்பிரகாசம் மற்றும் கனகசபாபதி, காலஞ்சென்ற நாகலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சுதாகரன் ஜெயரஞ்சினி, திரு.சு.சிவலிங்கம் (லண்டன்), திருமதி. பிரபாகரன் மஞ்சுளா (லண்டன்), திருமதி. தயாகரன் மாலினி (யா/மாவட்ட கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகப்பிரியன் (பிரான்ஸ்), மோகனப்பிரியா, கஜப்பிரியன், பிருந்தா (லண்டன்), திருமதி லக்ஸ்மன் கஜந்தா (லண்டன்), றம்மியா, மதுஸ், சுரேஸ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.09.2020 திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
தொடர்பு இலக்கம்: 077 315 1545

தகவல்:
குடும்பத்தினர்.

# மிகப்பெரிய இலக்கை விரட்டியடித்தது ராஜஸ்தான்



கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஐ.பி.எல். நேற்றைய ஆட்டம் மிகச் சிறந்த விருந்தாகியது. பஞ்சாப் அணி நிர்ணயித்த 223 ஓட்டங்கள் என்ற மிகப் பெரிய இலக்கை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19.3 பந்துப் பரிமாற்றங்களில் விரட்டியடித்து இன்ப அதிர்ச்சியளித்தது.

சார்ஜாவில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கே.எல். ராகுல், மயங் அகர்வால் களமிறங்கினர். இருவரும் ராஜஸ்தான் பந்து வீச்சை தும்சம் செய்தனர். 16.3 பந்துப் பரிமாற்றங்களில் இணைப்பாட்டம் 183 ஓட்டங்களை எட்டியது. சதம் கடந்து அதிரடி காட்டிய மயங் அகர்வால் 50 பந்துகளில் 10 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கலாக 106 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே மறுமுனையில் கலக்கிய ராகுல் 54 பந்துகளில் 69 ஓட்டங்களுடன் வெளியேறினார். மக்ஸ்வெல், பூரன் இணை இணைந்து இறுதிப் பந்துப் பரிமாற்றங்களை வெளுத்து வாங்கினார். பூரன் 8 பந்துகளில் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 25 ஓட்டங்களை விளாச 20 பந்துப் பரிமாற்றங்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய ராஜஸ்தான் அணி நிர்ணய இலக்கை நோக்கி சரியான ஓட்டசராசரியுடன் ஆரம்பம் முதல் ஆடியது. அணித் தலைவர் ஸ்ரீவன் சிமித் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார். மறுமுனையில் களமிறங்கிய பட்லர் சொதப்பியபோதும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த சம்ஞ்சு சாம்சன், சிமித்துடன் இணைந்து வெளுத்து வாங்கினார். பஞ்சாப்பின் அதிரடிக்கு சளைக்காத அதிரடி வான வேடிக்கைகளை இருவரும் காட்டினர். 27 பந்துகளில் 50 ஓட்டங்களுடன் சிமித்தும், 42 பந்துகளில் 7 சிக்ஸர்கள் அடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்ற சாம்சனும் வெளியேறினர். இதன் பின்னர் ராஜஸ்தான் அணி மந்த நிலைக்குச் சென்றது. ரிவேரியா ஆரம்பத்தில் பந்துகளை வீணடித்தார். 18 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் ஆட்டத்தின் போக்கையே மாற்றினார் ரிவேரியா. கொட்லர் வீசிய 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 5 சிக்கஸ்ரகளை ரிவேரியா விளாச ஆட்டம் கைமாறியது. இறுதியில் ஆர்ச்சர் வழமைபோன்று சிக்ஸர்கள் விளாச 19.3 பந்துப் பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது ராஜஸ்தான். ரிவேரியா 31 பந்துகளில் 7 சிக்ஸர்கள் அடங்கலாக 53 ஓட்டங்களை விளாசினார்.

ஆட்டநாயகனாக சஞ்சு சாம்சன் தெரிவானார். (ஒ,5)

**Techno World**
**தொழிநுட்பக்கல்லூரி**
Vealington Junction,Perumal Kovilady Jaffna.
**A/L தொழிநுட்ப்பிரிவு 2022**
பொறியியல் தொழிநுட்பம்
உயிர்முறைமைகள் தொழிநுட்பம்
காலை 8.30 மணிக்கு
புதிய பிரிவு ஆரம்பம் : 10.10.2020
(சகல பாடங்களும் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
A/L 2021, 2022 பொறியியல் உயிர்முறைமைகள் தொழிநுட்ப பிரிவு மாணவர்களுக்கான
கல்விச் சுற்றுலா : கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October - 19, 20, 21
ஆராய்ச்சி நிலையம். பண்ணை (Newzealand farm)
Tissue Culture lab, Automobile lab பார்வையிடப்படும்.
தொடர்புகளுக்கு
077 017 5346, 077 170 3549

**விசேட விலைக்கழிவு**
வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை.
France / Germany } 1100/= UK - 1000/=
திருமுருகன் கொம்நெற் TP:077 755 4528
321, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

**2021 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா**
2021 ஆம் ஆண்டு அமெரிக்க லொத்தர் விசாவிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
Thirumurugan com Net (pvt) Ltd
321, K.K.S Road, Jaffna.
077 755 4528, 021 222 7835

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் சண்முகநாதன் (பவா)

**(சமாதான நீதவான் - J.P)**

**(இயக்குனர்-புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்)**

தோற்றம்:08.03.1954 மறைவு:26.09.2020



ஏழாலை மேற்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சண்முகநாதன் கடந்த (26.09.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் விஜயலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், அருள்நங்கை (விரிவுரையாளர் இந்து நாகரிகம்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சந்துதன் மற்றும் தேவசந்துதன், தேவசாத்வீகன் (ஏஞ்சல் சர்வதேச ஆங்கில பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவமணி (சிங்கள, ஆங்கில ஆசிரியர்) மற்றும் இராமச்சந்திரன், கா்லஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் திலகமணி, செல்வராசா (புதிய உயர் கல்லூரி), பத்மநாதன் (இயக்குனர் பொருளியற் கல்லூரி யாழ், இணுவில், BARATHI கல்வி நிலையம்- சித்தன்கேணி), மோகனா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலபாஸ்கரன் (புதிய உயர் கல்லூரி), கமலாம்பிகை (பிரான்ஸ்), காலஞ்சென்ற அருள்வேல் மற்றும் இராஜநங்கை (ஆசிரியர், யா/ மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) காலஞ்சென்ற செந்தில்குமார், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் ஞானக்கொழுந்து (ஓய்வுபெற்ற ரெலிக்கொம் பணியாளர்), காலஞ்சென்ற நவமணி மற்றும் நவமணிதேவி, வசந்தராணி, சகிலா (ஓய்வு பெற்ற கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்), இராகினி ஆகியோரின் மைத்துனரும், செல்வரஞ்சன் (பிரான்ஸ்), சிவபாலன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு, கரையான்பிட்டி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'லக்ஸ்மி'
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
**S.அருள்நங்கை -மனைவி**
(புதிய உயர்கல்லூரி விரிவுரையாளர்)
021 225 5607